விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 11 சனிக்கிழமை (27.08.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 251

அருந்துங்கள்
அண்ணா கோப்பி
அண்ணா கோப்பியை உடனுக்குடன் வறுத்து அரைத்து பெற்றுக்கொள்ள
அண்ணா கோப்பிக்கடை
4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

# நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல்!


## உதவித்தேர்தல் ஆணையாளர்களுக்கு அழைப்பு

(நமது நிருபர்)

ஜனாதிபதித்தேர்தல் இந்த ஆண்டிலேயே நடத்தப் படவேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதியன்று தேர்தல் திணைக்களத்தின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அனைத்து உதவி தேர்தல் ஆணையாளர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு தேர்தல் திணைக்கள ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில் நவ. 18 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடுமென தெரி விக்கப்படுகிறது.

இது தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஒக்டோபர் 15ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் பெறப்படுமெனவும் தேர்தல் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு பயன்படுத்த வாக்காளர் பதிவேட்டில் கூடுதலாக சேர்ப்பிக்கப்பட்டு அந்த பதிவேடே பயன்படுத்தப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச)



மாவீரர் கேணல் ராஜுவின் மூன்றாம் ஆண்டு நினைவையொட்டி அவரின் திருவுருவப்படத்திற்கு தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அகவணக்கம் செலுத்துவதைக் காணலாம்.

# அவசரகாலச் சட்டம் அமுலிலுள்ளதால் தமிழ் மக்கள் மத்தியில் போர்ப்பதற்றம்

## விடுதலைப்புலிகள் கருத்து

(கிளிநொச்சி)

இலங்கையில் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகால சட்டத்தால் தமிழரின் தாயகத்தில் பதற்ற நிலை உருவாகியுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடாகிய விடுதலைப்புலிகள் ஆடி–ஆவணி மாத ஏட்டில் இடம்பெற்றுள்ள முகப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் சிங்களப் படையினருக்கு அரசு வழங்கியுள்ள ஒரு கொடூர ஏற்பாடே அவசரகாலச் சட்டமாகும். இந்தச் சட்டத்தை பயன்படுத்தி கடந்த இரண்டு தசாப்த காலமாக சிங்களப்படைகள் தமிழர் தாயகத்தில் ஒரு காட்டாட்சி நடாத்தி வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான தமிழர்களின் கொலைகளுக்கும், சித்திரவதைகளுக்கும், காணாமல் போவதற்கும் இந்தக் கொடூரசட்டமே காரணமாக அமைந்துள்ளது. இன்றைய சமாதான சூழலில் சந்திரிகா அரசு மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதற்கும் அமுல் படுத்தியுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடும் அவசரகாலச் சட்டமும் சமநேரத்தில் இயங்க முடியாது. சந்திரிகா அரசு பிரகடனப்படுத்தியுள்ள அவசரகாலச்சட்டம் போர்நிறுத்த உடன்பாட்டைப் பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து சந்திரிகா அரசு அவசரகால நிலையைப் பிறப்பித்து மீண்டும் போர்ப் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழுவினருடன் எம்.பிக்கள் சந்திப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடனம், அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறினர். (ச–8)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் இருந்து வெளிவரும் சுடரொளிப்பத்திரிகையின் ஊடகவியலாளர் பிரேமச்சந்திரன் ஜதுர்சன் ஜே.வி.பியனரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு கோட்டைரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் , முஸ்லிம் மீடியா சங்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் , சுதந்திர ஊடக இயக்கம் என்பன இணைந்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்று பிற்பகல் அளவில் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏற்பாடு செய்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் ,தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ,மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# இவ்வருடமே ஜனாதிபதித் தேர்தலை நடத்த உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டே நடத்தப்படவேண்டுமென உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான 5நீதியரசர்கள் கொண்ட குழு இந்த தீர்ப்பை வழங்கியது. உயர்நீதிமன்ற நீதியரசர் சரத்.என் சில்வா இந்தத் தீர்ப்பினை அறிவிக்கும்போது,நடைமுறையில் உள்ள ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி முதல் ஆரம்பமானதாக நீதிமன்றம் கருதியதன் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடத்தில் நடத்தவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பை உயர் நீதிமன்ற நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, என்.கே.உதலாஹம, எம்.ஏ.திஸநாயக்க, எம்.ஜீ.அமரதுங்க ஆகியோரும் இணைந்து ஏகமனதாக வழங்கினர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டுமென தீர்ப்பளிக்குமாறு கோரி ஜாதிகஹெல உறுமய தாக்கல்செய்த மனுமீதான தீர்ப்பை அறிவிக்கும்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாவதாகத் தெரிவித்த நீதியரசர் அந்தத்தினத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தும் வருடத்தையும் திகதியையும் பிரதிவாதியான தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்கவேண்டுமெனவும் தீர்ப்பளித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானதையடுத்து உயர் நீதிமன்றத்திற்கு முன்னால் கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான பிரேமதாசவின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலிசெலுத்தினர்.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்தவேண்டுமெனக் கோரி ஜாதிகஹெல உறுமயக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பை உயர்நீதி (10ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜோன் கராங்கின் மரணமும் சூடான் சமாதான முன்னெடுப்பின் அடுத்த கட்ட நகர்வுகளும்

(நேற்றைய தொடர்ச்சி)

இதில் நோர்வேக்கும் அனுசரணையாளர் என்ற அதிமுக்கிய பங்குண்டு. நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கில்ட பிறப்பியூர்ட் ஜோன்சன் நோர்வேத் தரப்பிலிருந்து முக்கிய பிரதிநிதியாகக் கடமையாற்றுகின்றார். சூடானுக்கான உதவி வழங்கும் நாடுகளின் இரண்டு நாள் மாநாடு ஒஸ்லோவில் இந்த ஆண்டு ஏப்ரலில் இடம்பெற்றது.

இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக நாட்டை ஆக்கிரமித்த போர் ஏற்படுத்திய பெரும் மனித அழிவுகள், சமூக, பொருளாதார சீர்குலைவுகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமாதான ஒப்பந்தம் முக்கிய கட்டத்திற்கு நகர்ந்த நிலையில் கராங்கின் மரணம் நிகழ்ந்துள்ளது. (2 மில்லியன் வரையான மக்கள் படுகொலைகள், பட்டினிச் சாவுகள் மற்றும் பாலியல் கொடுமைகளால் அழிக்கப்பட்டனர். மேலும் 2 மில்லியன் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடப்பெயர்வுக்குள்ளானார்கள்)

1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பிற்குப் பின்னர் கார்ட்டுமை (வட சூடான் தலைநகர்) மையமாகக் கொண்ட வட சூடானின் அதிகாரமையம் கராங்கின் உயிரை எடுப்பதற்கு முழு மூச்சாய் முயன்றது. அதுமட்டுமல்லாமல் சூடான் விடுதலை அமைப்பிற்குள் பிளவினை உண்டுபண்ணவும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டன. பல தடவைகள் கொலை முயற்சிகளிலிருந்து தப்பிய கராங்கின் உயிர், சூடான் அமைதி முயற்சியில் அவரது பங்கு அதிகமாகத் தேவை என்று உணரப்படும் இன்றைய கால கட்டத்தில் இழக்கப்பட்டுள்ளது.

## விபத்தா? சதியா?

ஜோன் கராங் சிறந்த கெரில்லா விடுதலை அமைப்புத் தலைவராக தன்னை உலகிற்கு அடையாளப்படுத்தியவர். தென் சூடான் மக்களின் விடுதலைக்காக ஆயுதமேந்திய போராட்டத்திலும், அமைதி முயற்சியிலும் அர்ப்பணிப்போடும் உறுதி யோடும் செயற்பட்டவர். அந்த நோக்கு நிலையில் ஒடுக்குமுறைக்குள்ளான தென் சூடான் மக்களுக்கு கராங்கின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றேயாகும்.

ஜோன் கராங்கின் இழப்பானது எதிர்பாராத, மோசமான ஒரு விபத்தென்றே இன்றுவரை கருதப்படுகின்றது. அதேவேளை இந்நிகழ்வு பல்வேறு ஐயங்களையும் கிளப்பியுள்ளது. விபத்து என்பதை காட்டும் அரசு உறுதிப்படுத்தத் தவறின், சமாதானத்தில் பின்னடைவு ஏற்பட வாய்ப்புண்டு என்ற கருத்தும் நிலவுகின்றது. அத்தோடு சமாதான முயற்சியில் சம்மந்தப்பட்ட

**இணையப் பார்வை**

தரப்புக்களுடன் கராங்கினால் வளர்த்தெடுக்கப்பட்ட நம்பிக்கையும் நல்லுறவும் சமாதானத்தின் முன்னகர்வுக்கு பெரும் வலுச்சேர்த்தன. இன்று பரஸ்பர நம்பிக்கையும் நல்லுறவும் கேள்விக்குள்ளாகி யுள்ளன. இஸ்லாமிய மேலாண்மை கடும்போக்கு சக்திகள் கராங்கின் இழப்பினை தமக்குச் சாதகமாகக் கையாள்வதன் மூலம் சமாதான முயற்சியை குழப்புவதற்கும் வாய்ப்புண்டு. சமாதான முயற்சியில் நேரடியாக சம்மந்தப்பட்ட முத்தரப்பின ரினதும் (வட சூடான், தென் சூடான், அனைத்துலக சமூகம்) உளசுத்தியான நடவடிக்கைகள் மூலமே சூடானில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியும். பட்டினிச்சாவைத் தடுக்க முடியும். படுகொலைகளை நிறுத்த முடியும். நாட்டினைக் கட்டியெழுப்ப முடியும். □

# திட்டமிடல் கூட்டமும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமும்

(வவுனியா)

வன்னிமாவட்ட திட்டமிடல் கூட்டமும் வவுனியா மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டமும் எதிர் வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் வெவ் வேறு நேரங்களில் நடைபெறவுள் ளன.

வன்னி மாவட்ட திட்டமிடல் கூட்டம் அமைச்சர் ரிஷாத் பதியு தன் தலைமையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஐந்து பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் வவு னியா, மன்னார், முல்லைதீவு அரச அதிபர்கள், மாவட்ட திட்டப்பணிப் பாளர்கள் ஆகியோரின் பங்குபற்று தலுடன் இடம்பெறும்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத்தலைவ ரான வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும். இதில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் உட்பட வவுனியா மாவட்டத் தின் சகல திணைக்கள தலைவர் களும் கலந்துகொள்வார்கள். (து)

# பொருளாதாரப் பிரச்சினைகுறித்து உரையாற்ற நிதியமைச்சர் ஆயத்தம்

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கி யுள்ள பொருளாதார நெருக்கடி கள் குறித்து விரைவில் பாராளு மன்றத்தில் உரையாற்றவுள்ள தாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடு பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள தாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.


வெளிநாடுகளிலிருந்தும், நிதி நிறுவனங்களிடம் இருந்தும் 9 இலட்சம் மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுக்கொண்டுள்ள தாக அவர் தெரிவித்தார்.

அவற்றுள் ஆயிரத்து 872 ரூபா ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப் பினர் ஆர்.எச்.ஏ.பத்திரன்ன எழுப் பிய வாய்மூல கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

மின்சாரசபை,இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனம் என்ப வற்றின் கடன்கள் காரணமாக பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அமுனுகம தெரிவித் தார்.

இவற்றிற்கு தீர்வாக 90 மில்லி யன் ரூபாவை ஆசிய வங்கியின் உதவிக்கால அடிப்படையில் பெற் றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து-9)





பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட உல களாவிய அங்கவீனர் தினத்தன்று யாழ்.சாயிசேவா நிலையத்தினர் அங்கவீனர்கள் சிலரையும் வாழ்வக சிறார்களையும் நிலையத்திற்கு அழைத்து அன்பளிப்புகளும் சிற்றுண்டிகளும் வழங்கி அவர்களை மகிழ்வித்தனர்.

# இராசி பலன்

27.08.2005
(ஆவணி 11, சனிக்கிழமை)
அட்டமி பிற்பகல் 2.03 மணிவரை
ரோகிணி பின்னிரவு 4.11 மணிவரை
இராகுகாலம் 09.05 - 10.35 மணிவரை
சுபநேரம் 03.05 - 4.35 மணிவரை
கிருஷ்ண ஜெயந்தி
அட்டமி நவமி

| | |
|---|---|
| மேடம் | விதண்டாவாதம், காரிய தாமதம், பண விரயம், அபகீர்த்தி. |
| இடபம் | ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், தேகநலன், நல்ல முயற்சி. |
| மிதுனம் | பரயாண அலைச்சல், சுப செலவு, நண்பர் கள் சந்திப்பு, சுர வியாதி. |
| கடகம் | இஷ்ட சித்தி, சகோதரர் உதவி, விருந்துப சாரம், புதிய தகவல். |
| சிங்கம் | தொழில் நன்மை, நிலைமாற்றம், அதிகா ரம், பிறர் உதவி. |
| கன்னி | ரோக நிலை, வீண்பயம், சரீரப்பிரயாசை, காரிய தாமதம். |
| துலாம் | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| விருச்சிகம் | உறவினர் வழி உதவி, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| தனுசு | காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், உடல் நலம், போசன சுகம். |
| மகரம் | வியாபார நன்மை, சிறு வியாதி, மனச் சேர்வு, பணக்குறைவு. |
| கும்பம் | நல்ல பிரயாசை, சுப செலவு, உறவினர் சந்திப்பு, மனப்பயம். |
| மீனம் | பிரயாண நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம், கீர்த்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# முதலாம் ஆண்டில் மாணவர் அனுமதி; முறைகேடு குறித்து 2000 முறைப்பாடுகள்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டு மாணவர் களை பாடசாலைக்குச் சேர்ப்பது சம்பந்தமான முறைப் பாடுகள் இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சின் முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணையாளர் பி.சமரசேகர தெரிவித்துள்ளார்.

இதுவரை 2000 முறைப்பாடுகள் அமைச்சின் விசா ரணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இந்த விசா ரணைக் குழுவில் மூன்று அதிகாரிகள் நியமிக்கப்பட் டுள்ளார்கள்.

பெற்றோரால் அனுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு விண் ணப்பமும் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்த ஆணையாளர் இதன் காரணமாக குறிப் பிடத்தக்க தாதமதம் ஏற்படக்கூடும் எனத் தெரி வித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் பணிப்பாளர்களின் உதவி யுடன் அனுமதிக்கான இறுதிப் பட்டியல் ஆணையாள ரினால் தயாரிக்கப்படும்.

கல்வியமைச்சின் செயலாளரது அனுமதி கிடைத் ததும் இந்த இறுதிப் பட்டியல் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். (து-2)

# ரயில் பயணிகளுக்கு காப்புறுதி வழங்க போக்குவரத்து அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

ரயில் பயணிகளுக்கு காப்புறுதி வழங்குவதற்கான திட்டமொன்றை அமுல்செய்வது குறித்து ரயில்வே போக்குவரத்து அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பயணச் சீட்டுக்களைப் பெற்று ரயிலில் பயணிப் போருக்கு மாத்திரமே காப்புறுதி நட்டஈடு வழங்கப்படும் என தெரிவித்த பீலிக்ஸ் பெரேரா பயணச்சீட்டுக்கள் இல்லாமல் பயணிப்போருக்கு காப்புறுதி நட்டஈடு வழங் கப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ரயில்களில் சுமார் 30 வீதமானோர் ரிக்கற் இன்றி பயணிப்பதாக தெரிவிக்கும் போக்குவரத்து அமைச் சர் காப்புறுதித் திட்டம் அமுல்செய்யப்படுவதன் மூலம் பயணச்சீட்டின்றி பயணிப்போரின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ரிக்கற் இன்றி பயணிப்போருக்கு கடும் தண்டனை வழங்கும் வகையில் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)


## ஏலவிற்பனை
## பிரதேச சபை, வேலணை

கீழ்க்காணும் அளவைக் கொண்ட உபயோகித்த ரயர் + ரியூப் 02.09.2005 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு தலைமை அலுவல கத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

| அளவு | எண்ணிக்கை |
|---|---|
| 650 X 15 | 18 |
| 600 X 16 | 02 |
| 500 X 12 | 02 |
| 1000X 20 | 04 |

மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை. (C/1618)

# கடல்கோள் காவுகொண்ட சமூக உளம்

②

*(நேற்றைய தொடர்ச்சி...)*

அனர்த்தத்தின் விளைவுகள் ஆழந்த வடுவை ஏற்படுத்தி உள்ளது.

1. உடல் ரீதியில: காயம, முறிவு, நோய்கள்,

2.உளவியல் ரீதியில்: அதிர்ச்சி, பீதி, பயம், பதகளிப்பு, கவலை துன்பம், இழப்பு, குற்ற உணர்வு, மீள் நினைவுக்கு வரல், அழுதல், மனச்சோர்வு.

3. சமூக ரீதியில்: வீடிணமை, துணையை இழத்தல், சடுதியான இடபபெயர்வு, கொடடகைகளில் வாழும் பிரச்சினைகள்.

பிரத்தியேக தனிமை இன்மை:

தனித் தாய் / தந்தை உள்ள குடும்பம், அநாதைகள், இளமைத் திருமணம், புலம்பெயர்வு, கல்வியை' இடைநடுவில் கைவிடல, வீட்டிற்குள் இருந்த பெண்கள் வெளிக்கு வரல்.

சட்ட உதவி பெறுவதில் கஷ்டம், ஊழல், உள்ளூர் தலைவர்கள் இன்மை, உள ளூர் தலைவர்களிடம் இருந்து கிடைக்கும் உதவி இன்மை.

4.பொருளாதார ரீதியில்: வாழ்க்கைப் பொருட்கள் இழப்பு, சொத்துக்கள் இழப்பு, நகை, வாகனம், வேலை வாய்ப்பின்மை, மீள பொருட்களைச் சேகரிக்க, நட்டஈடு பெறுவதில் உள்ள காலதாமதம், சிக்கல்கள், சமூக உள ஆதரவு தேவைபபடுகின்றது.

அனர்த்தத்தின் பின்பான வெவ்வேறு நிலைகளும் இடைநிலைகளும் வேறுபடும்.

மீட்பு நிலையில்: தற்காலிகக கொட்டகை/உணவு/மருந்து/உடைகள்/சுகாதாரவசதி/நீர்வசதி

சமூக உள ஆதரவு:

இழப்பிற்கும் சேதத்திற்கும் அடிப்படை உரிமைகள், நட்டஈடு, அரசதிட்டம்.

வீடுகளை மீளமைத்தல், அனாத்தத்திற்கு முன்னான நிலைக்கு வசதிகளை கொண்டுவருதல்.

மீளவும் சமூக மட்டத்திலான உதவிகள்:

இவை அடையாளபபடுத்தாமல் செய்யப்படல் வேண்டும். சட்ட உதவிகள் உறுதிப்படுத்தல், சமூக நிதி கிடைக்கப்பெறல், அனாத்தத்திறகுப் பின் பல அசௌகரியமான உணர்வுகள் வெளிப்படுத்துவர். இவை அசாதாரண சூழலில் ஏற்படும சாதாரண வெளிப்பாடுகளே.

அதிக அளவில் பாதிக்கப்படின் அதிக அளவு மன அழுததம ஏற்படும்.

சமூக உள ஆதரவு வழங்கப்படின், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சமூக உள ஆதரவு வழங்கப்படாதவர்களை விடக்குறைவு. ஆதலால் சமூக உள ஆதரவு மிகவும முக்கியமான பங்கை, முழுமையான கவனிப்பில் உதவுகின்றது. இது வேகமாகவும் சாதகமான மீளலுக்கு உதவும்,

**உணர்ச்சி வெளிப்பாடுகள்**

ஆழிப்பேரலை மரணத்தின் விளிம்புவரை இட்டுச் சென்றதுடன், சொததுக்களின் சேதம், இழப்புக்களுடன் அன்றி மனித உணர்வுகளின் ஆணி வேரையும் அசைத்துவிட்டது.

ஆழ்ந்த அதிர்ச்சி இழப்புகள் மேல் இருக்கும். சாதாரண வழமைகளுக்குத் தடைப்படல், எதிர்காலம் பற்றிய கேள்வி, எதிர்பாரா பிரச்சினைகள், மீளவும தன்னைக் கட்டி எழுப்பவும், குடும்பத்தைக் கட்டி எழுப்பவும், சமூகத்தைக் கட்டி எழுப்பவும் உணர்வுகளின் வெளிப்பாடுகள், எரிந்து விழல், பயம், பதகளிப்பு, பீதி, மீளநினைவுக்கு வரல், நம்பிக்கையீனம், கவலைப்படல்.

உணர்வுகளின் மாற்றங்களுக்கு அப்பால் சமூக கட்டமைப்பு உடைவு:

உடல் காயங்கள், தாய்மை, வீடின்மை, கணவனை இழந்தமை, தனிப் பெற்றோர், அநாதைகள், புலம்பெயர்வு, கல்வியை இடை நடுவில் விடுதல், பொருளாதார ரீதியில் சொத்துக்கள் இழப்புக் கள், வேலையின்மை, உதவி அற்ற நிலை, உடற்காயங்கள், அங்கவீனம், வருமான இழப்பு.

சமூக பொருளாதார தாக்கம் உணர்வு மாற்றத்தை ஏற்படுத்தும்.

உடல் காயம் சமூக பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும். இவை ஒன்றோடொன்று இணைகிறது.

**வெவ்வேறு அவத்தைகளில் உணர்வு மாற்றங்களை அறிதல்**

அனர்த்தத்திற்குப் பின் ஏற்படும் உணர்வுமாற்றங்கள் காலத்துடன் மாறும். சரியான ஆதரவு வழங்க வெவ்வேறு நிலைகளில் நிகழும் உணர்வுமாற்றங்களை அறிய வேண்டும்.

**1.உடனடி மாற்றங்கள் (சில மணித் தியாலங்களில்)**

1.பதற்றம், பதகளிப்பு, பீதி, உடனடியாக ஏற்படும் பாதுகாப்புத் தேடி ஓடுதல்.

2.அதிர்ச்சி, விறைப்புத்தன்மை, உண்மையான நிலையை ஏற்றுக் கொள்ளல் கடினமாக இருக்கும், ஒன்றும் ஏற்படாதது போன்று இருப்பர், கதைக்காமல் இருப்பர், மாறாட்டமான கதைகளும் உணவில் நாட்டமின்மையும் காணப் படும்.

3.ஆறுதல், மிகை எழுச்சி, உயிர் தப்பியதை எண்ணி சந்தோசம்.

4.குற்ற உணர்வு, தப்பியதற்கு தன்னைத்தானே குற்றம்காணல்.

5.மாறாட்டம், அலைதல், அலட்டல், காரணம் இன்றி அலைதல், கதைத்தல், சூழலில் நிகழ்வதை உணரமுடியாது இருத்தல்.

6.மீளச்சம்பவங்கள் வரல், பயங்கரக்கனவு, நித்திரை விட்டெழல், சிறிய சம்பவங்கள் மீள் உணர்தும், இரவில் கூடுதலாக ஏற்படும படபடப்பு, நித்திரை இன்மை அமைதியின்மை ஏற்படும்.

**2.உடனடியான அனர்த்தத்தின் பின்னான மாற்றங்கள் (1மாதம் - 6மோதம் வரை)**

1.இழவு

இது இழப்பிற்குப் பின் ஏற்படும்: கவலை, அழுதல், உணவில் நாட்டமின்மை, நித்திரை இன்மை, இறப்பதற்கு விரும்பல், செயற்பாடு குறைவு, ஏன் உயிர்வாழ்வேன்?, ஏன் இந்த வாழ்க்கை செத்திடலாம் போல் இருக்குது என்ற எண்ணம் தோன்றும்.

2.ஆரம்ப அறிகுறிகள் உளத்தாக்கத்திற்கு பின்னான மனவடுநோய்.

உளத்தாக்கம், மீளவரும் ஞாபகங்களால் துன்பமான கனவுகள் ஆறுதலடை, பாதிப்பை ஏற்படுத்திய சூழலைத் தவிர்த்து, நித்திரை இன்மை, பயப்படல், பீதி.

3.பதகளிப்புக்குரிய அறிகுறிகள் அமைதியற்ற நிலை, பட படப்பு, வியர்த்தல், பீதி.

4.சோர்வாகக் காணப்படல்.

5.அனுசரிக்கும் நிலை குறைபாடு.

**டாக்டர்:சி.யமுனாநந்தா**

மாற்றங்களுக்கு ஏற்ப வாழ முடியாதது.

வீட்டில் இருக்கவிரும்பாது அயல் வீட்டிற்குச் செல்லல், இழப்புகள், வீட்டை வெறுமையாகக்காட்டல், இரவில் நித்திரைக்கு மட்டும் வீட்டுக்குச் செல்லவேண்டியுள்ளது. 40-50% அனர்த்தங்களை எதிர் கொண்ட நிலை காணப்படும்.

**3.பிந்திய வெளிப்பாடுகள் - ஆறு மாதங்களிற்குப் பின்**

1.நீண்ட இழவு இரக்கம்

இழவு சாதாரணமானது. இயற்கையானதும் இழப்பிற்கு இழவை ஏற்றல், மனவடு ஆற உதவும்-- இதற்கான துனபப்படுதல், மிகவும் கடினமானது. தாங்கிக்கொளளமுடியாதது. இது இழப்புக்களால் ஏற்பட்ட பல உணர்வுகளினதும், பாதுகாப்பின்மை என்ற உணர்வினதும, உதவியற்ற நிலையினதும் பயத்தினதும் வெளிப்பாடாகும். இழவு எனபது குறித்தகாலத்திற்கு இவ்வுணர்வுகளை உணரும் காலமாகும்.

இக்காலமும் அதன் தாக்கமும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். இக்காலம் கிழமைகளாக இருக்கலாம மாதங்களாக இருக்கலாம். வருடங்களாக அமையலாம். இது படிப்படியாகக் குறைந்து, தாக்கம் ஏற்படுத்துவது குறைவு. *(தொடரும்...)*

(தொடரும்...)

## கடல் கோளினால் அகாலமானோர்க்கு சமர்ப்பணம்

## 'சகா' திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வானொலி புகழ் திவ்வியராஜனின் இயக்கத்தில் உருவானதும் "அண்ணை றைற்' புகழ் கே.எஸ்.பாலச்சந்திரனுடன் முன்னாள் வானொலி நாடக நடிகர்களும், சஞ்சிகை ஆசிரியர் நவமும் மற்றும் பல இளங்கலைஞர்களும் இணைந்து நடித்த சகா திரைப் படம் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் கலாசார கூட்டுறவு பெருமன்ற அனுசரணையுடன் நெல்லியடி மகாத்மா திரையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு காண்பிக்கப்படவுளளது.(ற)

## பாலம் புனரமைக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

சரசாலை வடக்கு, கப்பதூா பகுதிகளிற்கு இடையே பருத்தித்துறை வீதியில் சேதமடைந்திருந்த இரு பாலங்களில் ஒரு பாலத்திற்கான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப படவுள்ளன.

இதற்கென இரும்புக் கேடர்கள் பறிக்கப்பட்டு, அருகே மாற்றுப் பாதை போக்குவரத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ் வீதியில் யாக்கருவை அண்மியதான பாலம் புதிதாக சீர்செய்யப்பட்டுள்ளமை குறிபபிடத்தக்கது. (ற-21)

## சம்பள நிலுவைகள் ஆகஸ்ட் 31 ற்குள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் யாவும் இமமாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளது.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 24 வலயக் கல்வி அலவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ற-7)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அமிர்தபாசணி சமேத சந்திரசேகர வாரி வனநாத சுவாமி சிவன் ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் 2ஆவது ஞாயிற்றுககிழமைகளில் திருவாசக மெய்யடியார்களால் ஆலய அறங்காவலர் ம.கந்தையாவின் நெறிப்படுத்தலில் திருவாசக முற்றோதல் சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

அதற்கு அமைவாகத் திருவாசக முற்றோதல் கடந்த 14ஆம் திகதி சிறப்புற இடம்பெற்று மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெற்றது. திருவாசக முற்றோதலின்போது ஆலய அர்சசகர் தெட்சணாமூர்த்தி ஐயர் ஆலய வளர்ச்சி திருப்பணி வேலைகள் பற்றி எடுத்துக் கூறியதுடன் புதிய சித்திரத்தேர் அமைப்பது, கொடிமரம் நிறுத்துதல அடுத்த ஆண்டு மகோற்சவம நடாத்துதல் முதலியவற்றுக்கும் சகலரது ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (து)

## இ.போ.ச. புனரமைப்பு

இலங்கை போக்குவரத்துச் சபையைப் புனரமைப்பது சம்பந்தமான சட்டமூலம் அரசியல் யாப்பிற்கு அமைவாகவே உள்ளது என்று உயா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு பற்றி பாராளுமன்றத்தில சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார நேற்றுக்காலை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து உயர்நீதி மன்றம் இந்தச் சட்டமூலம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையை மீண்டும் ஸ்தாபிப்பதன் அடிப்படையில், நாட்டின் போக்குவரத்து துறையை ஒழுங்கமைப்பது இந்தச் சட்டமூலத்தின் நோக்கமாகும். (அ-2)

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்ற சைவ ய விவகாரக் குழுவினரால் வெளியிடப்படும் பதின்மூன்றாவது 'நல்லைக்குமரன்' மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மேற்படி குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமான கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும்.

யாழ்.மாநகராட்சி மன்ற இசைக் குழுவினரால் வழங்கப்படும் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சியையடுதது சைவ சமய விவகாரக் குழுவின செயலாளர் இ.இரத்தினசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நல்லை ஆதீன முதல்வா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ருபானந்தாவும் ஆசியுரை வழங்குவார்கள்.

மலரின் பதிப்பாசிரியர் ந.விஜய சுந்தரம் மலரை வெளியிட்டு வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மலரின் முதற்பிரதியை தெலலிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக்கொள்வார்கள.

ஆய்வுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் நிகழ்த்துவார்கள்.

இவ்விழாவில் மாலை ஆதீன கர்த்தா ஸ்ரீ.சு.து.ஷண்முகானந்தக் குருக்கள் கௌரவிக்கப்படவுள்ளார். (து-51)

## நிர்வாகத்துறையில் இளைஞர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் - பிரதமர் கருத்து

(கொழும்பு)

நிர்வாகத்துறையில் இளைய உறுப்பினர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள வார்த்தைகளில் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் செயற்படுத்தப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இளைய பாராளுமன்றத்தில் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போதே பிரதமர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். இந்த இளைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இந்த இளைய பாராளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும்.

இதில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சோந்த 225 இளைஞா, யுவதிகள் கலந்துகொணடனர். (அ-9)

## வீடமைப்புத் திட்டத்திற்கென தேசிய லொத்தர் சபை ரூ.16 மில்லியன் நன்கொடை

(கொழும்பு)

சுனாமி வீடமைப்புக்கென தேசிய லொத்தர் சபை கடந்த புதன் கிழமை 16 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

'சரண' என்ற விசேட லொத்தா மூலம் 14 மில்லியன் ரூபாவும, லொத்தரில் வெற்றி பெற்றவர்கள், தேசிய லொத்தர் சபை ஊழியர்கள், லொததர் முகவர்கள், அச்சகத்தினர், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட 2 மில்லியன ரூபாவும இதற்கென நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி அனர்த்த நிவாரணத்துக்கான ஜனாதிபதியின் தேசிய நிதியத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலர் டபிள்யு. ஜே.எஸ்.கருணாரட்ணவிடம் தேசிய லொத்தர் சபையின் பொதுமுகாமையாளர் எம்.எஸ்.கருணாரத்னவும், பிரதம நிதி அலுவலர் ஹர்ஸா பணடாரவும் இந்நிதியைக் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு சிவவீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி 19ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற்றது.

உற்சவ ஆரம்ப நாள் தொடங்கி சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட சமய பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள், நாம பஜனை என்பன ஒவ்வொரு நாளும சிறப்புற நடைபெற்றது. (து)

## பாடசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்குப் பதவி உயர்வு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசார சிற்றூழியர்களுககு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு மாகாண கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிற்றூழியர் சேவை தரம் II இல் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு சிற்றூழியர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்வியமைச்சின உதவிச் செயலாளர் ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சிற்றூழியர் சேவை தரம் IIஇல் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் திருபதியான சேவையை ஆற்றிய ஊழியர்கள் பதவி உயர்வுக்காக விணணப்பிக்க முடியும் என்று உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இந்த 5 ஆண்டு சேவைக்காலம் கணிக்கப்படவுள்ளது.

சேவை மூப்பு மற்றும் வெற்றிட அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களில் நடைபெறவுள்ளது. (அ-9)

# இன்று ஒரு தகவல்

## மூன்று பிச்சைக்காரர்கள்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். நிறைய நல்ல காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருந்தார். அவரைத் தேடி நிறையப் பேர் வருவார்கள். இவரால் முடிந்த உதவியைச் செய்வார்.

ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். ஏதாவது பொருள் உதவி பெறலாம் என்று நினைத்து மூன்று பேரும் தனித்தனியாக வந்தார்கள். முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். "ஐயா எனக்கு ஐந்து ரூபா வேண்டும். தயவுசெய்து கொடுங்கள்" என்று கேட்டான். இதைக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன இது, நான் ஏதோ உனனிடம் கடன்பட்டிருப்பது போலவும் அதைத்திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பது போலவும் கேட்கிறாய்? எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாவெல்லாம் தரமுடியாது. இந்தா இரண்டு ரூபா! எடுத்துக்கொண்டு ஓடு" என்று கூறி இரண்டு ரூபாவைத் தூக்கியெறிந்தார். அவன் அதை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டான்.

அடுத்ததாக மத்தியான வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். இவன் எப்படிக்கேட்டான் தெரியுமா? "ஐயா... பத்து நாட்களாக ஒருவேளை உணவு கூட சாப்பிடவில்லை தயவுசெய்து உதவுங்கள் " என்றான். "உனக்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டார் இவர். "நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்" என்றான். "இந்தா பத்து ரூபா. இதை வைத்துக்கொள். ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார். அவனும் அந்தப் பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன் பின்பு பின்னேரம் போல மூன்றாவதாக வந்த பிச்சைக்காரன் கேட்ட விதம் என்ன தெரியுமா? "மகாராஜா உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். அறவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் தான் கண்கண்ட தெய்வம்" என்றான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் சாப்பிடுங்கள். மற்றதை பின்னர் பார்க்கலாம்" என்று கூறி அவனை உட்கார வைத்து சாப்பாடு கொடுத்தார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். அதன்பின் இவர் கேட்டார். "இப்போது சொல்லுங்கள் நான் என்ன செய்ய வேண்டும் உங்களுக்கு?" என்று கேட்டார். அந்தப் பிச்சைக்காரன் இந்த அன்புக்கு நெகிழ்ந்து " ஐயா...பசியோடு வந்தேன். அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள். அதுபோதும் எனக்கு. வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என்மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும் உங்களுக்கு ஒரு குறையும் வராது" என்றான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனதைத் தொட்டது. அவன் மீது இருந்த அன்பு பன்மடங்கு அதிகமானது. அதன் விளைவு என்ன தெரியுமா? "இதோ பாரப்பா. நீ இனிமேல் வெளியே எங்கும் போக வேண்டாம். இங்கேயே இருந்துவிடு" என்றார். தன்னுடைய பங்களாவுக்குப் பக்கத்திலேயே அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்து கடைசிவரை அந்த ஆளைத தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையை சுவாமி சிவானந்தர் சொல்லியிருக்கிறார். இறைவன் அந்தக் கோடீஸ்வரர் மாதிரியாம். அந்த மூன்று வகைப் பிசசைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம். இன்றைக்கு உள்ள பக்தர்கள் எல்லாம் இந்த மூன்று வகையில் ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

நமது ஊர்ப்பக்கம் ஒரு பெரியவர் இருந்தார். இவர் செலவு செய்யப் பயப்படுவார். ஒரு பைசா ஒருவருக்குக் கொடுப்பதென்றாலும் மிகவும் யோசிப்பார். இவரைத் தேடி ஒரு நாள் சில பிச்சைக்காரர்கள் வந்தார்கள். "ஐயா நாங்கள் எல்லோரும் சேர்ந்து பிச்சைக்காரர் சங்கம் ஆரம்பிக்கிறோம். அதற்கு நீங்கள் ஒரு ஆயிரம் ரூபா நிதியுதவி செய்யுங்கள்" என்று கேட்டனர்.

"அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது. அவ்வளவு பணமெல்லாம் என்னிடம் கிடையாது" என்றார் இவர். "சரி ஒரு நூறு ரூபாவாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் முடி யாது" என்றார். "பத்துக்காசாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் என்னிடம் கிடையாது" என்றார் அந்தப் பெரிய மனிதர். "சரி அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்" என்றனர். " என்ன செய்ய வேண்டும்? " என்றார் இவர். " நீங்களும் எங்கள் சங்கத்தில் ஒரு அங்கத்தவராக இணைந்துவிடுங்கள்" என்றனர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொடரும் படுகொலை தாக்குதல்களால் வவு.மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

## -வவு.மாவட்ட நீதிவான் இளஞ்செழியன்

(கொழும்பு)

மக்கள் மனத்தில் அச்சத்தினை ஏற்படுத்தி வருகின்ற தொடர்ச்சியான மனிதப் படுகொலைகளையும் பல்வேறு தமிழ் அமைப்புக்களினுடைய அலுவலகங்கள் மீதான தொடர் குண்டுத் தாக்குதல்களை நிறுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை வவுனியா கோயில் குளத்தில் இனம்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட 55வயதான ராஜரட்ணம் சிறிகாந்தனின் மரண விசாரணையின் போது நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

வவுனியாவில் தொடரும் படுகொலைகளும் குண்டுத்தாக்குதல்களும் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர் சட்டத்துறை புலனாய்வு விசாரணைகளிலும் எதுவிதமான முன்னேற்றமும் இல்லை. இவ்வாறான சம்பவங்களை நேரில் காண்பவர்கள் கூட சாட்சியம் அளிக்க முன்வரத் தயங்குகின்றனர்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைதாகாமல் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதன் மூலம் அத்தகைய குற்றவாளிகளுடைய சொர்க்கபுரியாக வவுனியா மாறிவருகின்றது.

அரசுக்கும்,புலிகளுக்கும் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் இதுவரையில் இனம் தெரியாதவர்களினால் 21 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ் வாரத்தில் மாத்திரம் வவுனியாவில் 3 கொலைகள் நடைபெற்றுள்ளன. வவுனியாவில் வாழும் மக்கள் அச்சத்திற்கும்,பீதிக்கும் உள்ளாகியிருக்கும் அதேவேளை, படுகொலைகள் மற்றும் குண்டுவெடிப்புக்களால் மக்களுடைய இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இத்தகைய கொலைச் சம்பவங்களும் குண்டுத் தாக்குதல்களும் நடைபெறுவதன் மூலம் அமைதி நிலவிய வவுனியா தற்போது களமுனையாக மாறிவருகின்றது.

இந்த நிலையை, மாற்றி இங்கு அமைதியை நிலைநாட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் மாவட்ட நீதிவான் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் மேலதிக அறிக்கைக்கான இவ் மரண விசாரணை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-9)

# மேல்கொத்மலைத் திட்டப் பிரச்சினை குறித்து அரச உயர்மட்டக் குழுவுக்கு விளக்கப்படும்

## -அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று நேற்றுமுன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான அமைப்புக்களின் பிரதிநிதிகள் மலையக மக்களின் சமூக அரசியல் சூழல் காரணிகளை கருத்தில் கொண்டு மேல்கொத்மலைத் திட்டம் முற்றாக கைவிடப்பட வேண்டும் எனவும் மலையகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்புக்களையும் கருத்தில்கொண்டு இத்திட்டத்தை முற்றாகக் கைவிட வேண்டும் எனவும் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், மேல்கொத்மலைத் திட்டத்தினை அமுல்படுத்த முற்பட்டால் மலையகத்தில் பாரிய போராட்டங்களை முன்னெடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் தெரிவித்தனர். இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவினரின் கவனத்திற்குக் கொண்டு வரு வதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ற-9)

# நல்லூர் ஆலயச்சுற்றாடலில் நேற்றுமுதல் வீதித் தடைமுகாம்களில் புதிய நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தனின் உயர் திருவிழா நாட்களில் வீதித் தடைமுகாம்களின் நடைமுறைகள் பற்றி யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நல்லூர்க் கந்தனின் உற்சவம் ஆரம்பமாகியதிலிருந்து இன்றுவரை தடைமுகாம்களைப் பராமரிப்பதில் எதிர்கொண்ட அசௌகரியங்கள் மற்றும் இடையூறுகளைக் கருத்திற்கொண்டு 26.08.2005 இலிருந்து 03.09.05வரையான காலப்பகுதியில் வீதித் தடைகளின் அமுலாக்கம் பின்வருமாறு நடைமுறைப் படுத்தப்படும்.

* வீதித் தடைகள் யாவும் குறிப்பிட்ட நேரம் வரை தளர்த்தப்படாது அமுல்படுத்தப்படும்.

* வியாபாரப் பெருமக்கள் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 3.00மணிவரையும் தமது அடையாள அட்டையையும், ஆலயச்சூழலில் வியாபாரம் செய்வதற்காக மாநகராட்சி மன்றத்திற்கு பணம் செலுத்திய பற்றுச் சீட்டையும் தடைமுகாம் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்து உள்ளே வருவதற்கான அனுமதியைப் பெற முடியும்.

* தடைமுகாம்களின் உள்ளே நிரந்தரமாக வதிபவர்களும், ஆலயச் சூழலில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளில் பங்குகொள்ளும் கலைஞர்களும் நிலைமைக்குத் தக்கவாறு மாற்று ஒழுங்குகளை மேற்கொண்டு எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* இந் நடைமுறை பற்றிய மேலதிக விபரங்களை நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள உற்சவ காலப் பணிமனையுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஆலயச் சூழலில் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு இத்தகைய நடைமுறைகள் அவசியமாகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க பூரண ஆதரவு வழங்கும்

## -திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்ட முற்படுமாயின் அதற்கு ஆதரவை வழங்குவதே எமது நிலைப்பாடு என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பிரதாயபூர்வமான அரசியல் செயற்பாட்டிலிருந்து விலகி சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்க எமது கட்சி தயாராகவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

சமாதான செயற்பாடாயினும் ஐக்கிய தேசியக் கட்சி சம்பிரதாயபூர்வமான அரசியல் செயற்பாட்டிலிருந்து விலகி அரசியல் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளாதவாறு தெளிவான தீர்மானமொன்றை எடுத்துள்ளது.இதற்கு எமது முழுமையான ஆதரவினை வழங்கவுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது முதல் அதனைக்கொண்டு சென்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முக்கிய அரசியல் கட்சிகளாக இருந்துகொண்டு ஒத்துழைப்புக்களை வழங்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறு செயற்படாது. சகல வழிகளிலும் ஒத்துழைப்பினை வழங்குமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# நல்லூர் ஆலயச் சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெற்றுவரும் 'கந்தபுராணம்' தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6.00 மணிக்கு கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "செந்தில் வேலன்" என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ற-9)

# யாழ்.இந்துவின் பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசுத்தினம் இன்று சனிக்கிழமை காலை 8.45மணிக்கு விழா ஆரம்பமாகி நடைபெறுமென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ற)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

**கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் மிகுதிப் பெயர் விபரம் வருமாறு:-**

1125. யா/கோ/8648 திருமதி.அழகம்மா நல்லதம்பி
1126. யா/கோ/8653 திரு.சின்னட்டி கனகன்
1127. யா/கோ/8673 திரு.நாகமுத்து இரத்தினம்
1128. யா/கோ/8675 திரு.வயிரமுத்து வயித்திலிங்கம்
1129. யா/கோ/8679 திரு.சடையர் வயிரவப்பிள்ளை
1130. யா/கோ/8688 திரு.கணபதிப்பிள்ளை ஐயாத்துரை
1131. யா/கோ/8704 திரு.இராமு இராசலிங்கம்
1132. யா/கோ/8705 திரு.நல்லதம்பி சிவஞானம்
1133. யா/கோ/8710 திரு.யோசேப்பு சிங்கராசா
1134. யா/கோ/8716 திரு.இளையதம்பி ஜெகராசா
1135. யா/கோ/8728 திருமதி.கனகம்மா அருணாசலம்
1136. யா/கோ/8742 திரு.சின்னத்தம்பி செல்லப்பா
1137. யா/கோ/8745 திருமதி.சரஸ்வதி பொன்னம்பலம்
1138. யா/கோ/8757 திருமதி.பரிமளம் நல்லதம்பி
1139.யா/கோ/8778 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்
1140.யா/கோ/8779 திருமதி.மாணிக்கம் முத்துக்குமாரு
1141.யா/கோ/8790 திரு.செல்லையா இரத்தினசபாபதி
1142.யா/கோ/8822 திருமதி.இரத்தினமலர் சண்முகராசா
1143.யா/கோ/8828 திரு.செல்லப்பா சின்னத்தம்பி
1144.யா/கோ/8837 திருமதி.பாக்கியம் சின்னத்துரை
1145.யா/கோ/8849 திருமதி.சின்னம்மா கணபதி
1146.யா/கோ/8853 திரு.கந்தன் செல்லையா
1147.யா/கோ/8856 திருமதி.அசுபவதி துரைராஜா
1148.யா/கோ/8870 திருமதி. கமலாதேவி வேலாயுதம்
1149.யா/கோ/8891 திரு.சின்னத்துரை சதாசிவம்
1150.யா/கோ/8925 திரு.நீலன் முருகேசு
1151.யா/கோ/8935 திரு.கணவதி பொன்னன்
1152.யா/கோ/8941 திரு.வல்லிபுரம் தவம்
1153.யா/கோ/8949 திரு.கனகசபை நடராசா
1154.யா/கோ/8953 செல்வி.றஞ்சினி நவரத்தினம்
1155.யா/கோ/8959 திரு.சுப்பிரமணியம் சபாரத்தினம்
1156.யா/கோ/8984 திருமதி.சின்னமணி வேலுப்பிள்ளை
1157.யா/கோ/8989 திரு.முருகேசு வினாயகமூர்த்தி
1158.யா/கோ/9008 திருமதி.மகேஸ்வரி செல்லத்துரை
1159.யா/கோ/9009 திரு.இளையதம்பி செல்லத்துரை
1160.யா/கோ/9042 திருமதி.சத்தியதேவி சண்முகநாதன்
1161.யா/கோ/9043 திரு.பண்டாரி கணபதி
1162.யா/கோ/9064 திருமதி.எள்ளுப்பிள்ளை இராசையா
1163.யா/கோ/9073 திருமதி.பத்மாவதி சின்னத்துரை
1164.யா/கோ/9074 திருமதி.முத்தம்மா ஆழ்வாப்பிள்ளை
1165.யா/கோ/9092 திரு.பொன்னர் பசுபதி
1166.யா/கோ/9095 திரு.தம்பையா தியாகராஜா
1167.யா/கோ/9114 திரு.நன்னி தம்பிமுத்து
1168.யா/கோ/9125 திருமதி.செல்லம்மா ஐயாத்துரை
1169.யா/கோ/9142 திருமதி.பொன்னம்மா செல்லையா
1170.யா/கோ/9143 திரு.முருகேசு கணபதிப்பிள்ளை
1171.யா/கோ/9147 திரு.அப்புக்குட்டி சின்னத்துரை
1172.யா/கோ/9148 திருமதி.பகவதி பொன்னம்பலம்
1173.யா/கோ/9149 திருமதி.அழகரத்தினம் தர்மலிங்கம்
1174.யா/கோ/9159 திருமதி.இராசமணி தம்பிமுத்து
1175.யா/கோ/9165 திருமதி.சீதாலட்சுமியம்மா ஆபதோத் தாரண குருக்கள்
1176.யா/கோ/9166 திரு.ஆறுமுகம் நாகலிங்கம்
1177.யா/கோ/9175 திருமதி.சின்னப்பிள்ளை கார்த்திகேசு
1178.யா/கோ/9176 திரு.கந்தையா முருகேஸ்
1179.யா/கோ/9179 திருமதி.தங்கம்மா வயிரமுத்து
1180.யா/கோ/9180 திருமதி.செல்வரத்தினம் பூபாலராசா
1181.யா/கோ/9190 திருமதி.வள்ளியம்மை செல்வரத்தினம
1182.யா/கோ/9196 திருமதி.சிவமணிதேவி அன்ன லிங்கம்
1183.யா/கோ/9208 திரு. நாகமுத்து சுந்தரம்
1184.யா/கோ/9215 திரு.சிவப்பிரகாசம் பேராயிர உடையார்
1185.யா/கோ/9234 திருமதி.நல்லம்மா சித்தன்
1186.யா/கோ/9239 திரு.செல்லப்பா தேவதாசன்
1187.யா/கோ/9242 திருமதி.இராசமுத்து சபாபதி
1188.யா/கோ/9246 திரு.நாகலிங்கம் தியாகராசா
1189.யா/கோ/9254 திரு.கந்தன் கிருஸ்ணபிள்ளை
1190.யா/கோ/9259 திரு.மாணிக்கர் கந்தசாமி
1191.யா/கோ/9264 திருமதி.பாறி நாகன்
1192.யா/கோ/9267 திரு.நாகமுத்து செல்லையா
1193.யா/கோ/9271 திரு.நீக்கிலாப்பிள்ளை இராசேந்திரம்
1194.யா/கோ/9272 திருமதி.மகேஸ்வரி இளையதம்பி
1195.யா/கோ/9281 திரு.சின்னப்பு இரத்தினம்
1196.யா/கோ/9284 திருமதி.நேசமலர் அப்புத்துரை
1197.யா/கோ/9285 திரு.கந்தையா வேலுப்பிள்ளை
1198.யா/கோ/9289 திருமதி. சிவபாக்கியம் இரத்தினப் பிரகாசம்
1199.யா/கோ/9307 திருமதி. மனோன்மணி துரையப்பா
1200.யா/கோ/9355 திரு.நாகமுத்து கதிர்காமநாதன்
1201.யா/கோ/9399 திருமதி.பவளம்மா வீரசிங்கம்
1202.யா/கோ/9415 திருமதி.சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம்
1203.யா/கோ/9443 திருமதி.சிவசோதி சிதம்பரப்பிள்ளை
1204.யா/கோ/9453 திருமதி.சிவபாக்கியம் தம்பிராசா
1205.யா/கோ/9459 திரு.வல்லிபுரம் தில்லைநாதர்
1206.யா/கோ/9465 திரு.கபிரியேல் சந்தியாபிள்ளை
1207.யா/கோ/9475 திருமதி.சிவபாக்கியம் கணபதிப் பிள்ளை
1208.யா/கோ/9477 திரு.வயிரமுத்து கதிர்காமநாதன்
1209.யா/கோ/9488 திரு.கந்தையா கணேஸ்
1210.யா/கோ/9497 திருமதி.செல்லம்மா பாலசிங்கம்
1211.யா/கோ/9499 திரு.சிதம்பரப்பிள்ளை செல்லப்பா
1212.யா/கோ/9511 திருமதி.கனகம்மா செல்லத்துரை
1213.யா/கோ/9514 திருமதி.இராஜலட்சுமி சின்னப்பு
1214.யா/கோ/9559 திருமதி.புவனேஸ்வரி நவரட்ணராசா
1215.யா/கோ/9563 திருமதி.சிவபாக்கியம் பொன்னுக் கோன்
1216.யா/கோ/9576 திருமதி.இலட்சுமி வீரகத்தி
1217.யா/கோ/9588 திரு.சிவக்கொழுந்து நவரத்தினம்
1218.யா/கோ/9597 திருமதி.ஆச்சிப்பிள்ளை இளையதம்பி
1219.யா/கோ/9618 திருமதி.தங்கம்மா வைரவமுத்து
1220.யா/கோ/9622 திரு.மருதப்பு இராசரத்தினம்
1221.யா/கோ/9632 திருமதி.ஜானகியம்மா கந்தசாமி
1222.யா/கோ/9636 திருமதி.சரோஜினி திருநாவுக்கரசு
1223.யா/கோ/9644 திரு.இளையதம்பி இராசையா
1224.யா/கோ/9688 திரு.சின்னத்தம்பி இராசரத்தினம்
1225.யா/கோ/9689 திரு.மாணிக்கம் கந்தையா
1226.யா/கோ/9707 திரு.சின்னத்தம்பி பழனித்துரை
1227.யா/கோ/9745 திரு.சீனிவாசகம் சுப்பிரமணியம்
1228.யா/கோ/9746 திருமதி.சின்னாச்சி முத்தையா
1229.யா/கோ/9758 திரு.இராசா இரத்தினம்
1230.யா/கோ/9759 திரு.மாசிலாமணி கணேஸ்
1231.யா/கோ/9760 திரு.செல்லத்துரை செல்வரத்தினம்
1232.யா/கோ/9775 திரு.சின்னையா நடராஜா
1233.யா/கோ/9778 திரு.காலிங்கர் சின்னையா
1234.யா/கோ/9787 திருமதி.தவமணி முத்துரத்தினம்
1235.யா/கோ/9792 திரு.சுந்தரம் இரத்தினம்
1236.யா/கோ/9798 திருமதி.பொன்னம்மா மகாலிங்கம்
1237.யா/கோ/9815 திருமதி.எம்மிலிமங்கையர்கரசி ஆபிரகாம்சிவகுரு
1238.யா/கோ/9836 திருமதி.ஞானம்மா மாணிக்கம்
1239.யா/கோ/9854 திரு.சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்
1240.யா/கோ/9859 திரு.கந்தையா சண்முகலிங்கம்
1241.யா/கோ/9860 திருமதி. ராசேஸ்வரி ஆறுமுகம் பிள்ளை
1242.யா/கோ/9861 திருமதி.சிவபாக்கியம் சிங்காரம்
1243.யா/கோ/9878 திரு.முருகேசு தம்பிராசா
1244.யா/கோ/9886 திருமதி.தங்கம்மா தம்பிப்பிள்ளை
1245.யா/கோ/9894 திருமதி.இராசமணி கந்தையா
1246.யா/கோ/9896 திருமதி.அன்னப்பிள்ளை மாப்பாணர்
1247.யா/கோ/9902 திருமதி. மாணிக்கம் மாப்பாணர்
1248.யா/கோ/9913 திரு.சின்னான் பொன்னுத்துரை
1249.யா/கோ/9946 திருமதி.தங்கமலர் காசிப்பிள்ளை
1250.யா/கோ/9968 திரு.செம்பன் வல்லிபுரம்
1251.யா/கோ/9990 திருமதி.தங்கச்சியம்மா கனகரத்தினம்
1252.யா/கோ/10000 திருமதி.தெய்வநாயகி சிவசிதம்பரம
1253.யா/கோ/10019 திரு.கந்தையா பொன்னுத்துரை
1254.யா/கோ/10021 திருமதி.செல்லப்பாக்கியம் தரும லிங்கம்
1255.யா/கோ/10032 திருமதி.தெய்வானைப்பிள்ளை இளையதம்பி
1256.யா/கோ/10036 திருமதி.த்ங்கம்மா கனகரத்தினம்
1257.யா/கோ/10041 திரு.சடையன் கனகன்
1258.யா/கோ/10043 திருமதி.இரத்தினம் தம்பித்துரை
1259.யா/கோ/10045 திரு.கணபதி சின்னத்தம்பி
1260.யா/கோ/10046 திரு.அருணாசலம் நடராஜா
1261.யா/கோ/10071 திரு.கந்தன் நாகமுத்து
1262.யா/கோ/10073 திருமதி.சிதம்பரம் பொன்னன்
1263.யா/கோ/10077 திருமதி.ரேணுகா குகதாசன்
1264.யா/கோ/10086 திரு.பொன்னையா வாதவூரன்
1265.யா/கோ/10122 திரு.செல்லத்துரை சந்திரசேகரம்
1266.யா/கோ/10125 திரு.சின்னத்துரை அம்பிகாபதி
1267.யா/கோ/10132 திருமதி.அன்னமுத்து தம்பிப் பிள்ளை
1268.யா/கோ/10135 திரு.சண்முகம் உருத்திரமூர்த்தி
1269.யா/கோ/10143 திரு.வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
1270.யா/கோ/10155 திரு.வைரவன் வேலுப்பிள்ளை
1271.யா/கோ/10164 திருமதி.சரஸ்வதி செல்லத்துரை
1272.யா/கோ/10200 திரு.சண்முகம் செல்லத்துரை
1273.யா/கோ/10217 திருமதி.தவமணி செல்லையா
1274.யா/கோ/10218 திருமதி.செல்லம்மா சோமசுந்தரம்
1275.யா/கோ/10233 திருமதி.பரமேஸ்வரி கயிலாய பிள்ளை
1276.யா/கோ/10235 திரு. ஆறுமுகம் சிவபாதம்
1277.யா/கோ/10237 திரு. பொன்னம்பலம் துரைஐயா
1278.யா/கோ/10244 திருமதி.சின்னத்தங்கச்சி வல்லிபுரம
1279.யா/கோ/10270 திரு.கதிரவேலு சிவஞானந்த சுந்தரம்
1280.யா/கோ/10277 திரு.முருகேசு வடிவேலு
1281.யா/கோ/10284 திருமதி.சின்னம்மா மாணிக்கம்
1282.யா/கோ/10291 திரு.நாகன் செல்லத்துரை
1283.யா/கோ/10311 திரு.கணபதிப்பிள்ளை கந்தையா
1284.யா/கோ/10338 திரு.சின்னப்பர் தம்பிராசா
1285.யா/கோ/10352 திரு.நாகன் இரத்தினம்
1286.யா/கோ/10354 திரு.சுப்பர் செல்லர்
1287.யா/கோ/10369 திருமதி.தங்கலட்சுமி இராசையா
1288யா/கோ/10377 திருமதி.குட்டிப்பிள்ளை வைரமுத்து
1289யா/கோ/10380 திருமதி.மீனாட்சியம்மாள் ஹ பொன்னையா
1290யா/கோ/10399 திருமதி.இராசம்மா சிதம்பரநாதன்
1291யா/கோ/10406 செல்வி.இராசம்மா ஆறுமுகம்
1292யா/கோ/10408 திரு.மயிலு இராமலிங்கம்
1293யா/கோ/10421 திருமதி.இரத்தினம் ஆலுப்பிள்ளை
1294யா/கோ/10432 திருமதி.அழகம்மா இராசேந்திரம

**கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.யா/கோ/237 திருமதி.தவமணிதேவி சந்திரசேகரலிங்கம்
2.யா/கோ/318 திருமதி.செல்வமணி இராசேஸ்வரன்
3.யா/கோ/430 திரு.பொன்னையா இராசகோபால்
4.யா/கோ/467 திரு.சரவணமுத்து சுப்பிரமணியம்
5.யா/கோ/521 திரு.வல்லிபுரம் சிவஞானம்
6.யா/கோ/576 திரு.இரத்தினம் சந்திரகுமாரன்
7.யா/கோ/612 திருமதி.அருந்ததி சுந்தரலிங்கம்
8.யா/கோ/777 திரு.சிதம்பரப்பிள்ளை சிவபாதலிங்கம்
9.யா/கோ/807 திரு.தர்மலிங்கம் ஸ்ரீதரலிங்கம்
10.யா/கோ/808 திரு.இராசா சிவபாதம்
11.யா/கோ/870 திருமதி.அருள்ஜோதி ஆறுமுகநாதன்
12.யா/கோ/1029 திரு.கணேஸ் வைத்தியநாதன்
13.யா/கோ/1143 திரு.பாலரட்ணம் வெஸ்லி இரட்ண இரஞ்சித்
14.யா/கோ/1238 செல்வி.நிர்மலாதேவி சுப்பிரமணியம்
15.யா/கோ/1265 திருமதி.பிள்ளையம்மா செல்லத்துரை
16.யா/கோ/1324 திரு.வேலுப்பிள்ளை சிவபாதம்
17.யா/கோ/1325 திரு.வயிரமுத்து சுப்பிரமணியம்
18.யா/கோ/1360 திரு.தம்பாப்பிள்ளை சபாநாயகம்
19.யா/கோ/1386 திருமதி.சரஸ்வதி நல்லதம்பி
20.யா/கோ/1397 திரு.அப்பாக்குட்டி செல்வரத்தினம்
21.யா/கோ/1437 திரு.இளையதம்பி தர்மலிங்கம்
22.யா/கோ/1585 திரு.கந்தையா சுப்பிரமணியம்
23.யா/கோ/1840 திரு.சின்னக்குட்டி மகாலிங்கம்
24.யா/கோ/1933 திருமதி.செல்வம் தாமோதரம்பிள்ளை
25.யா/கோ/1939 திரு.வெள்ளையர் தம்பிராசா
26.யா/கோ/2244 திருமதி.வசந்தி ஜெயராசா
27.யா/கோ/2329 திரு.நல்லதம்பி கந்தையா
28.யா/கோ/2339 திரு.சின்னத்தம்பி சதாயநாதன்
29.யா/கோ/2422 திரு.இராமலிங்கம் இராசையா
30.யா/கோ/2434 திரு.நாகமுத்து சிவஞானம்
31.யா/கோ/2490 திரு.கந்தையா பொன்னுத்துரை
32.யா/கோ/2516 திரு.பரமு சந்திரசேகரம்
33.யா/கோ/2533 திரு.சுப்பிரமணியம் தில்லையம்பல வாணர்
34.யா/கோ/2537 திரு.சின்னத்தம்பி துரைராசா
35.யா/கோ/2828 திரு.தம்பிமுத்து துரைராசா
36.யா/கோ/3231 திரு.பசுபதி சிவநாதன்
37.யா/கோ/3244 திரு.சிற்றம்பலம் சண்முகநாதன்
38.யா/கோ/3256 திருமதி.சிவபாக்கியம் செல்லர்
39.யா/கோ/3316 திரு.அரியகுட்டி அரியரத்தினம்
40.யா/கோ/3619 திரு.சிவக்கொழுந்து இராசரத்தினம்
41.யா/கோ/3758 திரு.கந்தையா அமிர்தலிங்கம்
42.யா/கோ/3838 திரு.கார்த்தியேசு மகாதேவா
43.யா/கோ/3990 திரு.முகுந்தன் தம்பிராசா
44.யா/கோ/4068 திரு.பண்டாரம் புவிராசா
45.யா/கோ/4193 திரு.சுப்பிரமணியம் கிருஷ்ணசாமி
46.யா/கோ/4266 திரு.செல்லத்துரை இரத்தினசபாபதி
47.யா/கோ/4292 திரு.வடிவேலு சிவசுப்பிரமணியம்
48.யா/கோ/4295 திரு.சீவரத்தினம் சத்தியசீலன்
49.யா/கோ/4298 திருமதி.புஸ்பரத்தினம் சிதம்பரப்பிள்ளை
50.யா/கோ/4374 திருமதி.ஜானகி இரவீந்திரன்
51.யா/கோ/4437 திரு.விஸ்வலிங்கம் சின்னத்துரை
52.யா/கோ/4563 திருமதி.மோகனாம்பிகை ஆறுமுக நாதன்
53.யா/கோ/4628 திருமதி.சிவமணி ஏழுமலைநாதன்
54.யா/கோ/4673 திரு.கந்தையா கனகரத்தினம்
55.யா/கோ/4712 திரு.இராசையா நடராசா
56.யா/கோ/4806 திரு.கணபதி சின்னத்தம்பி
57.யா/கோ/4927 திருமதி.தவமணி நாகராசா
58.யா/கோ/5058 திரு.ஐயாத்துரை அரசபிள்ளை
59.யா/கோ/5148 திருமதி.புவனேஸ்வரி தம்பியப்பா
60.யா/கோ/5480 திரு.கதிர்காமு அப்புத்துரை
61.யா/கோ/5686 திரு.டானியேல் பாக்கியரட்ணம்
62.யா/கோ/5873 திருமதி.பவளம் திருநாவுக்கரசு
63யா/கோ/5996 திரு.நடராசாக்குருக்கள் கேதீஸ்வரக் குருக்கள்
64.யா/கோ/6029 திரு.செல்லையா. நடராசா
65.யா/கோ/6101 திருமதி.இராசலட்சுமி தர்மகுலசிங்கம்
66.யா/கோ/6325 திரு.சுப்பையா சிவஞானம்
67.யா/கோ/6416 திருமதி.இரத்தினம் சண்முகவடிவேல்
68.யா/கோ/6554 திரு.தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
69.யா/கோ/6555 திருமதி.பத்மாவதி பாலசுப்பிரமணியம்
70.யா/கோ/6576 திரு.பொன்னம்பலம் சுந்தரலிங்கம்
71.யா/கோ/6676 திரு.வேலுப்பிள்ளை சிவகுருநாதன்
72.யா/கோ/6709 திருமதி.ரஞ்சனாதேவி கருணானந்தன்
73.யா/கோ/6772 திரு.செல்லப்பா வீரசிங்கம்
74.யா/கோ/6781 திரு.கிட்டிணன் சிறிகாந்தராசா
75.யா/கோ/7019 திருமதி.செல்வராணி கனகலிங்கம்
76.யா/கோ/7692 திரு.நாகர் சுப்பிரமணியம்
77.யா/கோ/7805 திருமதி.மாணிக்கம் இராமலிங்கம்
78.யா/கோ/7886 திரு.குப்புசாமி முருகையா
79.யா/கோ/8026 திருமதி.சிவசோதி செல்லத்துரை
80.யா/கோ/8032 திருமதி.கமலேஸ்வரி கமலராஜா
81.யா/கோ/8116 திரு.நல்லையா கணேசநாதன்
82.யா/கோ/8163 திருமதி.சகுந்தலாதேவி நடேசு
83.யா/கோ/8390 திருமதி.பாலஞானமணி நவரத்தினம்
84.யா/கோ/8654 திரு.அருளப்பு துரைராசா
85.யா/கோ/8672 திரு.பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்
86.யா/கோ/8920 திரு.நாகலிங்கம் பாலசிங்கம்
87.யா/கோ/8975 திருமதி.சர்வலோகநாயகி கந்தசாமி
88.யா/கோ/9185 திரு.செல்லத்துரை யோகநாதன்
89.யா/கோ/9298 திருமதி.சுகிர்தவாணி செல்வசற் குணநாதன்
90.யா/கோ/9313 திருமதி.மகேஸ்வரி நாகரட்ணம்
91.யா/கோ/9419 திருமதி.மதுரநாயகி உமாகாந்
92.யா/கோ/9463 திரு.கந்தையா பாலசுப்பிரமணியம்
93.யா/கோ/9705 திரு.ஆறுமுகம் பத்மநாதன்
94.யா/கோ/9729 செல்வி.சாந்தினி சுப்பிரமணியம்
95.யா/கோ/9943 திரு.அமிர்தலிங்கம் அருள்வேல செல்வன்
96.யா/கோ/9988 திரு.சின்னக்குட்டி பொன்னுத்துரை
97.யா/கோ/10162 திருமதி.சற்குணதேவி ஜெகசோதி
98.யா/கோ/10167 திருமதி.யெமலதேவி சந்திரன்
99.யா/கோ/10169 திரு.பொன்னையா குணரத்தினம்
100.யா/கோ/10212 திருமதி.மாணிக்கம் பொன்னு
101.யா/கோ/10285 திருமதி.தவமணி இராசேந்திரம்
102.யா/கோ/10360 திரு.சின்னவி மகேந்திரம்
103.யா/கோ/10437 திரு.கந்தையா மாணிக்கம்

(முற்றும்)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.யா/ச/1 திரு.கனகராசா சிவராஜ்
2.யா/ச/5 திரு.கந்தையா செல்லப்பா
3.யா/ச/7 திரு.கார்த்திகேசு சோமசேகரம்பிள்ளை
4.யா/ச/18 திரு.செல்லர் நவரத்தினம்
5.யா/ச/28 திருமதி.செல்வமணி கிருபைராசா
6.யா/ச/30 திரு.செல்லையா கனகரத்தினம்
7.யா/ச/37 திரு.தம்பு தம்பித்துரை
8.யா/ச/41 திரு.நல்லையா அழகரத்தினம்
9.யா/ச/54 திருமதி.பரமேஸ்வரி சிவஞானம்
10.யா/ச/58 திருமதி.பராசக்தி சிவானந்தன்
11.யா/ச/63 திருமதி.அலிஸ்காமாச்சி தேவதாசன்
12.யா/ச/64 திரு.சின்னத்துரை நடராஜா
13.யா/ச/65 செல்வி.நவமலர் செல்லப்பா
14.யா/ச/70 திரு.நாகமுத்து கனகரத்தினம்
15.யா/ச/85 திரு.சின்னையா இராசையா
16.யா/ச/95 திரு.ஆறுமுகம் விசுவநாதன்
17.யா/ச/100 திரு.முருகப்பர் ஆறுமுகம் இராசரட்ணம்
18.யா/ச/111 திரு.பிள்ளையான் செல்லர்
19.யா/ச/128 திரு.கதிரவேலு சிவபுண்ணியம்பிள்ளை
20.யா/ச/140 திரு.கார்த்திகேசு வேலாயுதம்
21.யா/ச/145 திரு.வயிரவி சண்முகம்
22.யா/ச/151 திரு.திலகராயர் கைலைநாதன்
23.யா/ச/154 திரு.கந்தையா இராமலிங்கம்
24.யா/ச/162 திருமதி.ஜெயமணி ஸ்ரோறா
25.யா/ச/164 திரு.விநாயகர் தம்பிராசா
26.யா/ச/183 திருமதி.தனலட்சுமி நடராசா
27.யா/ச/185 திரு.வைத்திலிங்கம் இராசரட்ணம்
28.யா/ச/218 திருமதி.பாக்கியம் கனகசபை
29.யா/ச/226 திருமதி.செல்வநாயகி சின்னத்துரை
30.யா/ச/242 திரு.பாலன் பசுபதி
31.யா/ச/243 திரு.நடராசா வைரவநாதன்
32.யா/ச/246 திரு.முத்துச்சாமி சச்சிதானந்தம்
33.யா/ச/278 திரு.பெரியான் கனகரத்தினம்
34.யா/ச/286 திரு.செல்லையா நடராசா
35.யா/ச/291 திரு.வேலு பெரியதம்பி
36.யா/ச/302 திரு.வேலு இராமு
37.யா/ச/304 திருமதி.பவளம் ஐயாத்துரை
38.யா/ச/309 திருமதி.கனகம்மா மயில்வாகனம்
39.யா/ச/313 திரு.கந்தையா தறுமலிங்கம்
40.யா/ச/331 திருமதி.நாகம்மா மாணிக்கம்
41.யா/ச/338 திருமதி.இராசம்மா குமாரசுவாமி
42.யா/ச/364 திரு.கந்தையா விக்னேஸ்வரன்
43.யா/ச/366 திருமதி.பாக்கியம் இராசா
44.யா/ச/377 திரு.நாகமுத்து பரமசாமி
45.யா/ச/379 திரு.செல்லமுத்து நாகராசா
46.யா/ச/388 திரு.வினாசித்தம்பி சேனாதிராசா
47.யா/ச/415 திரு.வயிரவி செல்லத்துரை
48.யா/ச/434 திரு.வன்னித்தம்பி பாலசுப்பிரமணியம்
49.யா/ச/450 திரு.இளையவன் நடேசன்
50.யா/ச/456 திரு.கோவிந்தப்பிள்ளை சிவப்பிரகாசம்
51.யா/ச/458 திரு.கோவிந்தப்பிள்ளை சிவப்பிரகாசம்
52.யா/ச/461 திருமதி.பராசக்தி நாகதீபன்
53.யா/ச/469 திருமதி.புஸ்பரத்தினம் சௌந்தரநாயகம்
54.யா/ச/475 திரு.வல்லிபுரம் கணபதிப்பிள்ளை தியாகராசா
55.யா/ச/529 திருமதி.இராசம்மா ஆசைப்பிள்ளை
56.யா/ச/558 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
57.யா/ச/574 திரு.அம்பலம் சிதம்பரப்பிள்ளை
58.யா/ச/579 திரு.பொன்னையா துரைசிங்கம்
59.யா/ச/582 திரு.முத்துச்சாமிப்பிள்ளை சிவானந்தம்
60.யா/ச/596 திரு.சிற்றம்பலம் மாணிக்கவாசகர்
61.யா/ச/599 திரு.பொன்னையா கந்தசாமி
62.யா/ச/607 திரு.தம்பிப்பிள்ளை தங்கராசா
63.யா/ச/614 திரு.மாணிக்கம் சின்னையா
64.யா/ச/620 திருமதி.அன்னமுத்து இலட்சுமணன்
65.யா/ச/633 திருமதி.ராசம்மா அப்புலிங்கம்
66.யா/ச/634 திரு.இலகுப்பிள்ளை றவுடேந்திரன்
67.யா/ச/635 திரு.இராஜரட்ணம் தர்மராஜா
68.யா/ச/639 திரு.சோமசுந்தரம் தெய்வேந்திரம்
69.யா/ச/641 திரு.சதாசிவம் கார்த்திகேசு
70.யா/ச/653 திரு.முருகேசு இராசதுரை
71.யா/ச/658 திரு.தம்பாப்பிள்ளை கதிரவேற்பிள்ள்ள
72.யா/ச/659 திருமதி.இராசம்மா இராசரத்தினம்
73.யா/ச/664 திரு.சின்னையா பொன்னுத்துரை
74.யா/ச/665 திரு.கதிரவேலு செல்வராசா
75.யா/ச/667 திருமதி.நாகம்மா குலவீரசிங்கம்
76.யா/ச/677 செல்வி.நவமணி கந்தையா
77.யா/ச/704 திரு.நாகலிங்கம் தியகராஜா
78.யா/ச/742 திரு.சின்னார் நாகரத்தினம்
79.யா/ச/752 திருமதி.இராசமணி சோமசுந்தரம்
80.யா/ச/767 திரு.விசுவலிங்கம் கனகசபை
81.யா/ச/776 திருமதி.கலாதேவி தம்பித்துரை
82.யா/ச/787 திருமதி.சிவகெங்கா அழகரட்ணம்
83.யா/ச/813 செல்வி.சந்திரகாந்தி ஆறுமுகம்
84.யா/ச/815 திருமதி.இலட்சுமி ஐயாத்துரை
85.யா/ச/842 திருமதி.கணேசம்மா கைலாயபிள்ளை
86.யா/ச/848 திருமதி.செல்லம்மா இரத்தினசபாபதி
87.யா/ச/852 திரு.கந்தையா பத்மநாதன்
88.யா/ச/856 திருமதி.கனகாம்பிகை விசுவலிங்கம்
89.யா/ச/858 திருமதி.தெய்வானைப்பிள்ளை அமிர்தலிங்கம்
90.யா/ச/861 திரு.இராமலிங்கம் நடேசன்
91.யா/ச/878 திருமதி.அன்னபூரணம் சுப்பிரமணியம்
92.யா/ச/882 திருமதி.சிவப்பாக்கியம் ஆதிமூர்த்தி
93.யா/ச/891 திரு.கந்தையா தர்மராசா
94.யா/ச/894 திருமதி.இலட்சுமி பாலர்
95.யா/ச/901 திரு.செல்லையா பூலோகசுந்தரம்
96.யா/ச/911 திருமதி.சிவபாக்கியம் ஏகாம்பரம்
97.யா/ச/923 திருமதி.தங்கரத்தினம் கந்தையா
98.யா/ச/932 திரு.காத்திகேசு நவரட்ணம்
99.யா/ச/935 திருமதி.புவனேஸ்பரி தெய்வேந்திரப்பிள்ளை
100.யா/ச/968 திரு.பொன்னம்பலம் சிதம்பரப்பிள்ளை
101.யா/ச/973 திரு.சபாநர்யகம் சிதம்பரப்பிள்ளை
102.யா/ச/976 திரு.சபாநாயகம் சிதம்பரப்பிள்ளை
103.யா/ச/984 திரு.டாக்டர் செல்லத்துரை கணேசன்
104.யா/ச/992 திருமதி.இந்திராவதி சங்கரலிங்கம்
105.யா/ச/994 திருமதி.இராசமணி கந்தசாமி
106.யா/ச/1006 திருமதி.நேசம்மா இரட்னசிங்கம்
107.யா/ச/1017 திரு.அம்பலவாணர் தங்கேஸ்வரன்
108.யா/ச/1019 திருமதி.ஞானேஸ்வரி கந்தசாமி
109.யா/ச/1021 திருமதி.ஞானேஸ்வரி கந்தசாமி
110.யா/ச/1027 திரு.கந்தையா தங்கத்துரை
111.யா/ச/1048 திரு.சின்னத்துரை புஷ்பபாலன்
112.யா/ச/1049 திருமதி.சிவஞானவதியார் பரமராசா
113.யா/ச/1059 திரு.முத்துக்குமாரு தம்பியையா
114.யா/ச/1062 திரு.வைத்திலிங்கம் மார்க்கண்டு
115.யா/ச/1074 திருமதி.பரமேஸ்வரி அருணாசலம்
116.யா/ச/1082 திரு.கந்தையா பாலசுப்பிரமணியம்
117.யா/ச/1088 திரு.கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
118.யா/ச/1089 திருமதி.மௌனமணி குமாரசாமி
119.யா/ச/1095 திரு.மாணிக்கம் நாகராசா
120.யா/ச/1098 திருமதி.விஜயதேவி சிவகணேசமூர்த்தி
121.யா/ச/1107 திரு.சோமசுந்தரம் தனராசா
122.யா/ச/1108 திரு.பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்
123.யா/ச/1109 திரு.தம்பிப்பிள்ளை பாலசிங்கம்
124.யா/ச/1113 திரு.இளையவி சின்னத்துரை
125.யா/ச/1120 திரு.கதிரவேலு அப்புலிங்கம்
126.யா/ச/1123 திருமதி.சிவக்கொழுந்து வரதராஜா
127.யா/ச/1130 திருமதி.மகேஸ்வரி செல்வநாயகம்
128யா/ச/1131 தீருமதி.சறோஜினிதேவி சின்னராசா
129.யா/ச/1133 திரு.கணபதிப்பிள்ளை நடராசா
130.யா/ச/1139 திருமதி.செல்வரட்ணம் நவரட்ணம்
131.யா/ச/1148 திருமதி.அன்னம்மா தியாகராசா
132.யா/ச/1149 திரு.கார்த்திகேசு சுப்பிரமணியம்
133.யா/ச/1152 திருமதி.சரோஜினிதேவி சின்னராசா
134.யா/ச/1153 திருமதி.நாகேஸ்வரி இராசரத்தினம்
135.யா/ச/1170 திரு.தம்பிப்பிள்ளை சிங்அரியரத்தினம்
136.யா/ச/1171 திரு.மார்க்கண்டு இரத்தினசிங்கம்
137.யா/ச/1172 திருமதி.வள்ளியம்மை குமாரசாமி
138.யா/ச/1175 திருமதி.நாகேஸ்வரி குமாரசாமி
139.யர்/ச/1181 திரு.கந்தசாமி குணரத்தினம்
140.யா/ச/1189 திரு.குட்டித்தம்பி தேவபாலன்
141.யா/ச/1190 திரு.வேலுப்பிள்ளை வீரசிங்கம்
142.யா/ச/1199 திரு.வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
143.யா/ச/1219 திருமதி.தனபாக்கியலட்சுமி சிவசுப் பிரமணியம்
144.யா/ச/1220 திரு.தம்பையா ஆனந்தரட்ணம்
145.யா/ச/1226 திருமதி.சரஸ்வதி செல்வநாயகம்
146.யா/ச/1228 திரு.வடிவேலு கதிர்காமவேலு
147.யா/ச/1231 திருமதி.கனகாம்பிகை கனகசபை
148.யா/ச/1233 திரு.நவரத்தினம் இராமநாதன்
149.யா/ச/1235 திருமதி.சரஸ்வதி அருணாசலம்
150.யா/ச/1243 திரு.மயில்வாகனம் சணேசானந்தம்
151.யா/ச/1251 திருமதி.திலகவதி கெங்கராஜா
152.யா/ச/1254 திருமதி.சரஸ்வதி மகேந்திரன்
153.யா/ச/1256 திருமதி.தனலட்சுமி நடராசா
154.யா/ச/1257 திரு.வயிரவநாதர் அமிர்தலிங்கம்
155.யா/ச/1263 திரு.தாமோதிரம்பிள்ளை தங்கராசா
156.யா/ச/1283 திரு.வேலுப்பிள்ளை கனகசுந்தரம்
157யா/ச/1284 திரு.குமாரசாமி வேலாயுதம்பிள்ளை
158.யா/ச/1295 திருமதி.மகேஸ்வரி பரமேஸ்வரன்
159.யா/ச/1317 திரு.தம்பு தர்மலிங்கம்
160.யா/ச/1320 திரு.இராமலிங்கம் கனகரெத்தினம்
161.யா/ச/1326 திருமதி.மகேஸ்வரி கந்தஞானி
162.யா/ச/1334 திரு.முருகுப்பிள்ளை பாலசுப்பிரமண்ணியம்
163.யா/ச/1340 திரு.இராமசாமி துரைராசசிங்கம்
164.யா/ச/1343 திரு.முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்
165.யா/ச/1356 திரு.வேலுப்பிள்ளை சிவராசா
166.யா/ச/1361 திருமதி.மகேஸ்வரி சுப்பிரமணியம்
167யா/ச/1364 திரு.சுப்பையா செல்வராஜா
168.யா/ச/1366 திரு.தில்லையம்பலம் சற்புத்திரன்
169.யா/ச/1367 திரு.கார்த்திகேசு ஐயாத்துரை
170.யா/ச/1372 திரு.கந்தர் கதிரவேலு
171.யா/ச/1374 திரு.அம்பலவாணபிள்ளை சச்சிதானந்தன்
172.யா/ச/1376 திருமதி.சின்னமணி சபாபதி
173.யா/ச/1379 திருமதி.அன்னலட்சுமி பொன்னம்பலம்
174.யா/ச/1393 திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி
175.யா/ச/1400 திரு.சண்முகம்பிள்ளை கனகலிங்கம்
176.யா/ச/1401 திரு.கதிரிக்குட்டி நாகலிங்கம்
177.யா/ச/1413 திரு.சின்னத்துரை புஸ்பபாலன்
178.யா/ச/1415 திரு.அப்புக்குட்டி துரைரத்தினசிங்கம்
179.யா/ச/1423 திருமதி.மேபல் அரியமலர் போல் நாகேந்திரன்
180.யா/ச/1443 திருமதி.சரஸ்வதி கிருஷ்ணமூர்த்தி
181.யா/ச/1455 திருமதி.அன்னம்மா இராசதுரை
182.யா/ச/1470 திரு.செல்லப்பா நடேசு
183.யா/ச/1478 திரு.நடராசா மகாலிங்கம்
184.யா/ச/1485 திரு.நவரத்தினம் குமாரசாமி
185.யா/ச/1489 திருமதி.அரியமலர் தனபாலசிங்கம்
186.யா/ச/1490 திரு.வேலுப்பிள்ளை அமலநாதன்
187.யா/ச/1498 திரு.பொன்னையா கனகசுந்தரம்
188.யா/ச/1518 திரு.இரத்தினசாமி செல்வராசா
189.ய்ா/ச/1519 திருமதி.ஆச்சிப்பிள்ளை கனகசபை
190.யா/ச/1529 திரு.நாகமுத்து சிவகுரு
191.யா/ச/1530 திரு.வயித்திலிங்கம் நவரத்தினம்
192.யா/ச/1533 திரு.தாமோதிரம்பிள்ளை சேனாதிராசா
193.யா/ச/1535 திருமதி.பாக்கியம் கந்சாமி
194.யா/ச/1540 திருமதி.தங்கரத்தினம் நவசிவாயம்
195.யா/ச/1558 திருமதி.சிவபாக்கியம் சுப்பிரமணியம்
196.யா/ச/1563 திரு.செல்லையா திருநாவுக்கரசு
197.யா/ச/1567 திருமதி.திலகவதி வேலாயுதம்பிள்ளை
198.யா/ச/1573 திரு.மாப்பானசிங்கம் இராசதுரை
199.யா/ச/1595 திரு.நாகலிங்கம் குருசாமி
200.யா/ச/1601 திரு.வல்லிபுரம் ஸ்ரீகாந்தா
201.யா/ச/1604 திருமதி.இராஜேஸ்வரி ஆறுமுகம்
202.யா/ச/1610 திருமதி.கனகமணி முத்துவேலுப்பிள்ளை
203.யா/ச/1617 திருமதி.கணேஸ்வரி விஜயரட்ணம்
204.யா/ச/1618 திருமதி.இராசாத்தி இரத்தினசிங்கம்
205.யா/ச/1623 திரு.முருகுப்பிள்ளை விவேகானந்தன்
206.யா/ச/1624 திருமதி.கண்மணி நாகராசா
207.யா/ச/1626 திருமதி.இராஜேஸ்வரி வேதநாயகம்
208.யா/ச/1629 திரு.சீனியன் இராசையா
209.யா/ச/1630 திருமதி.மகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
210.யா/ச/1635 திருமதி.ஞானம்மா சுப்பிரமணியம்
211.யா/ச/1638 திரு.பொன்யையா சிவசுப்பிரமணியம்
212.யா/ச/1645 திரு.முருகேசு நவரத்தினம்
213.யா/ச/1654 திரு.சபாபதிப்பிள்ளை இராசையா சோமசுந்தரம்
214.யா/ச/1661 திரு.சதாசிவம் மகேசு
215.யா/ச/1673 திரு.கணபதிப்பிள்ளை சின்னையா
216.யா/ச/1675 திருமதி.மீனலோஜினி செந்தில்நாதன்
217.யா/ச/1684 திரு.சபாநாயகம் கனகசுந்தரம்
218.யா/ச/1685 திரு.ஆறுமுகம் நாகலிங்கம்
219.யா/ச/1692 திரு.கணபதிப்பிள்ளை அமரசிங்கம்
220.யா/ச/1703 திருமதி.மனோரஞ்சிதம் கணவதிப்பிள்ளை
221.யா/ச/1707 திரு.சபாபதிக்குருக்கள் வரதராஜக் குருக்கள்
222.யா/ச/1708 திருமதி.செல்லம் தெய்வேந்திரம்
223.யா/ச/1709 திரு.முத்துக்குமாரு கந்தையா
224.யா/ச/1712 திரு.குமாரசாமி சதாசிவம்
225.யா/ச/1713 திரு.கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை
226.யா/ச/1714 திரு.தம்பு சுப்பிரணியம்
227.யா/ச/1721 திரு.காத்திகேசு சுப்பிரமணியம்
228.யா/ச/1724 திரு.நாராயண்பிள்ளை ஆறுமுகம்
229.யா/ச/1725 திரு.வயிரமுத்து இராமநாதன்
230.யா/ச/1735 திரு.சுந்தரம்பிள்ளை முருகேசு
231.யா/ச/1738 திரு.ஏகாம்பரம்பிள்ளை கதிர்காமத்தம்பி
232.யா/ச/1751 திருமதி.சிவகாமசுந்தரி செல்வராசா
233.யா/ச/1753 திரு.முருகேசு சுப்பிரமணியம்
234.யா/ச/1760 திரு.கனகசபை கணேசன்
235.யா/ச/1765 திரு.பதஞ்சலி தேவசேனாபதி
236.யா/ச/1772 திருமதி.சீவரத்தினம் சுப்பையா
237.யா/ச/1774 திரு.கந்தசாமி ஐயாத்துரை
238.யா/ச/1775 திரு.வைத்திலிங்கம் துரைராசசிங்கம்
239.யா/ச/1776 திரு.கந்தையா அருமைநாயகம்
240.யா/ச/1782 திருமதி.கதிர்ராசிப்பிள்ளை விஸ்வலிங்கம்
241.யா/ச/1791 திரு.கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை
242.யா/ச/1799 திருமதி.தனலட்சுமி நடராசா
243.யா/ச/1805 திருமதி.நாகபூசணிஅம்மை தியாகராசா
244.யா/ச/1815 திரு.செல்வநாயகம் பத்மஜெயம்
245.யா/ச/1817 திரு.ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்
246.யா/ச/1821 திரு.வேலாயுதம் சண்முகம்
247.யா/ச/1824 திரு.செல்லையா இரத்தினதுரை
248.யா/ச/1845 திரு.இராமலிங்கம் குமாரசாமி
249.யா/ச/1852 திருமதி.பார்வதியம்மா சிவபாதசுந்தரம
250.யா/ச/1857 திரு.சின்னவர் ஆறுமுகம்
251.யா/ச/1871 திருமதி.இராசபூபதி தம்பிராசா
252யா/ச/1873 திரு.முத்துச்சாமி ஐயர் பாலகுருசாமி சர்மா
253.யா/ச/1893 திரு.முருகேசு நமசிவாயம்
254.யா/ச/1895 திரு.நல்லையா சோமசுந்தரம்
255.யா/ச/1900 திரு.வீரசிங்கம் பாஸ்கரன்
256.யா/ச/1906 திரு.சங்கரப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
257.யா/ச/1913 திருமதி.சேதுப்பிள்ளை அருள்பிரகாசம்
258.யா/ச/1917 திரு.இளையதம்பி மயில்வாகனம்
259.யா/ச/1918 திரு.கந்தையா சின்னத்துரை
260.யா/ச/1925 திரு.பாலசுப்பிரமணியக்குருக்கள் தியா கராஜக்குருக்கள்
261.யா/ச/1930 திருமதி.கண்மணி ஆறுமுகசாமி
262.யா/ச/1932 திரு.கந்தையா பொன்னம்பலம்
263.யா/ச/1936 திருமதி.பூரணம் கிருஷ்ணபிள்ளை
264.யா/ச/1946 திரு.கார்த்திகேசு அரிச்சந்திரா
265.யா/ச/1952 திரு.வினாசித்தம்பி சிவஞானம்
266.யா/ச/1966 திரு.சுப்பிரமணியம் இராசரத்தினம்
267.யா/ச/1969 திரு.தம்பிமுத்து சிறிகரன்
268.யா/ச/1971 திரு.செல்லையா கந்தசாமி
269.யா/ச/1973 திருமதி.நாகரத்தினம் நடனசண்முகம்
270.யா/ச/1978 திருமதி.பரமேஸ்வரி கெங்காதரன்
271.யா/ச/1980 திரு.கதிரவேலு சதாசிவம்
272.யா/ச/1983 திருமதி.சிவக்கொழுந்து மாரிமுத்து
273.யா/ச/1985 திரு.குமரப்பெருமாள் சரவணப்பெருமாள்
274.யா/ச/1994 திருமதி.சிவபாக்கியம் கந்தசாமி
275.யா/ச/1996 திருமதி.சரஸ்வதி செல்லத்துரை
276.யா/ச/2011 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
277.யா/ச/2013 திருமதி.வள்ளியம்மை கிருஷ்ணர்
278.யா/ச/2016 திரு.சின்னத்துரை கந்தசாமி
279.யா/ச/2023 திருமதி.அன்னலட்சுமி வயிரவநாதன்
280.யா/ச/2031 திருமதி.அன்னப்பிள்ளை சிற்றம்பலம்
281.யா/ச/2032 திருமதி.செல்லமுத்து வைத்திலிங்கம்
282.யா/ச/2037 திரு.அருணாசலம் சதாசிவம்
283.யா/ச/2041 திரு.கதிரவேலு தியாகராசா
284.யா/ச/2057 திருமதி.மாரிமுத்து மாணிக்கம்
285.யா/ச/2062 திருமதி.பொன்னம்மா நவரத்தினம்
286.யா/ச/2064 திருமதி.மீனாட்சிப்பிள்ளை இராமலிங்கம்
287.யா/ச/2077 திருமதி.சரஸ்வதியம்மா புவனேந்திரன்
288.யா/ச/2086 திரு.கிருஷ்ணர் சிவபாதசுந்தரம்
289.யா/ச/2089 திருமதி.கனகம்மா வரதராஜன்
290.யா/ச/2096 திரு.தர்மலிங்கம் பாலச்சந்திரன்
291.யா/ச/2098 திரு.சுந்தரம்பிள்ளை பொன்னம்பலம்
292.யா/ச/2111 திருமதி.வள்ளியம்மை சின்னத்துரை
293.யா/ச/2118 திரு.நாகலிங்கம் முருகேசு
294.யா/ச/2121 திரு.இரத்தினசிங்கம் பரஞ்சோதி
295.யா/ச/2127 திருமதி.பாக்கியம் ஆசைப்பிள்ளை
296.யா/ச/2139 திரு.பொன்னம்பலம் சண்முகலிங்கம்
297.யா/ச/2143 திருமதி.சரஸ்வதியம்மா சுவாமிநாதர்
298.யா/ச/2144 திரு.ஆசைப்பிள்ளை கிருஷ்ணர்
299.யா/ச/2145 திருமதி. மீனாட்சிப்பிள்ளை கிருஸ்ண பிள்ளை
300யா/ச/2159திரு. ஆறுமுகம் இராசா
301யா/ச/2166திரு. கந்தையா வேலாயுதபிள்ளை

(தொடரும்)


'நோபோல்' வீச்சில் அவுஸ்திரேலியா சாதனை

# நான்காவது டெஸ்ட் போட்டியில் இங். அவுஸ்திரேலியா மோதல்

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் கிரிக்கெட் டெஸ்ட் தொடரின் நான்காவது போடடி நேற்று முன்தினம் நொட்டிங்காமில் நடைபெற்றது.

இப்போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில இங்கிலாந்து அணி 4 விக்கெற் இழப்புக்கு 229 ஓட்டங்களை எடுத்திருந்தது.






இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையில் இருக்க, முக்கியமான நான்காவது டெஸ்ட் நேற்றுமுன் தினம் ஆரம்பமாகியது. இப்போட்டியில இங்கிலாந்து அணியில் மாற்றங்கள எதுவும செய்யப்படவில்லை. அவுஸ்திரேலிய அணியில் வலது முழங்கை காயம் காரணமாக பந்துவீச்சாளர் மெக்ராத் இடம்பெறவில்லை. பதிலாக கஸ்பரோவிச் இடம்பெற்றார். இதேபோல் சிறந்த நிலையில் இல்லாத கிலஸ்பி நீக்கப்பட்டு இளம் வீரர் ஷேன் ரெய்ட் அறிமுகப் படுத்தப்பட்டார்.



நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோன துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களான பிரட் லீ, கஸ்பரோவிச் ஆகியோர் படுமோசமாக பந்துவீசி உதிரிகளை அள்ளி வழங்கினார்கள். இதைப் பயன்படுத்தி டிரஸ்கோதிக், ஸ்டிராஸ் பந்துகளை விளாசித்தள்ளினார். புதுமுக வீரர் ஷேன ரெய்ட்டினது வேகப்பந்து வீச்சும் எடுபடவில்லை.

இதையடுத்து அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் கால் பந்து வீசுவதற்கு



600 விக்கெற் சாதனையாளர் ஷேன் வோன் அழைக்கப்பட்டார். இவரது பந்தில் ஸ்டிராஸ 35 ஓட்டங்களுடனும ஹைடன்ம பிடிகொடுதது ஆட்டமிழநதா. உணவுஇடைவேளைக்குப் பிறகு மழையால் இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும ஆரம்பமானபோது இங்கிலாந்து திடீர் சரிவைச் சந்தித்தது. ரெய்ட்டினது பந்துவீச்சில் டிரஸ் கோதிக் சிக்சர் 6 பவுண்ரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களுடனும, இயான் பெல் 3 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய வோன் 58 ஓட்டங்களுடன் வெளியேறினார். களத்தில் பட்டர் சன் 33 ஓட்டங்களுடனும், பிளின்ரொப் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் அரைச் சதத்தை கடந்த டிரஸ்கோதிக் டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக சதம் அடிக்காமல் அதிக ஓட்டங்கள் (876 ஓட்டங்கள்) எடுத்த இங்கிலாந்து வீரர் என்ற பெருமை பெற்றுள்ளார்.

மேலும் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் 19 நோ- போல வீசி சாதனை படைத்துளளார்கள். (து-19)

# சிம்பாவே அணியென எம்மை நினைக்க வேண்டாம்

நியூசிலாந்து அணிக்கு கங்குலி சவால்

சிம்பாவே, இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் நேற்று இந்திய அணியும் நியூசிலாந்து அணியும் மோதின.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இந்திய அணித்தலைவர் கங்குலி,

"நியூசிலாந்து அணி சிம்பாவே அணிக்கு எதிராக 44ஓவர்களில் 397ஓட்டங்களை எடுத்தது சாதாரணமான விடயமல்ல. ஆனாலும் சிக்சர்கள், பவுண்ரிகள் என விளாசித தள்ளிய நியூசிலாந்து வீரர்களது அதிரடி எம்மீது எந்தளவுக்குச் சாத்தியமாகின்றது எனப் பார்ப்போம்" எனச் சவால் விட்டார்.

மேலும் முதற்போட்டியில் 44 ஓவர்களில் 397ஓட்டங்களைக் குவித்து நமக்கு எச்சரிக்கை கொடுத்திருக்கிறார் நியூசிலாந்து அணிததலைவர் பிளெமிங். ஆனால் நமது பந்து வீச்சாளர்களது பந்துகளை அப்படி விளாசமுடியாது. எமது அணியில் அனுபவம் மிக்க திறமையான பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். இதனால் முதல் போட்டியில் விஸ்வரூபம் எடுத்தவர்கள் தமது அணியுடனான போட்டியில் என்ன செய்யப் போகிறார்கள்?



நமது அணியுடனான போட்டியில் நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்களது உண்மையான திறமை தெரிந்துவிடும். எனது தலைமையிலான தமது வீரர்கள் சிறிதளவு திறமைகாட்டினால் போதும் முத்தரப்புத் தொடரை வெற்றியுடன் ஆரம்பிக்கலாம் எனவும் கங்குலி உறுதியளித்துள்ளார். (து-19)

# நட்சத்திர வீராங்கனை அஞ்சு தலைமை தாங்கும் இந்திய அணி

தென்கொரியாவில் உள்ள இன்சியான் நகரில் செப்ரெம்பர் 1ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை 16ஆவத ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

விளையாட்டு செய்திகள்

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் இந்திய அணிக்கு நட்சத்திர வீராங்கனை அஞ்சு தலைமை வகிக்கிறார். இந்திய அணியில் 27 வீரர்களும் 22 வீராங்கனைகளும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த அணி வீரர்களது பெயர்ப்பட்டியல் நேற்றுமுன்தினம் இந்திய தடகள அமைப்பினால் வெளியிடப்படடுள்ளது. இவ்வணி இம்மாதம் 29ஆம் திகதி தென்கொரியாவிற்கு புறப்படவுள்ளது. (து-19)

# விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் காண ஆசைப்படும் இந்திய கிரிக்கெற் வீரர்



சிம்பாவேயில் உள்ள விக்டோரியா நீர்வழ்ச்சியை மீண்டும் பார்ப்பதற்கு ஆசை என்கிறார் இந்திய அணியின் ராகுல் ராவிட்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1977ஆம் ஆண்டு சிம்பாவேக்கு முதன் முறையாக வந்துள்ளதாகவும் அதற்கு பின் பல தடவைகள் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சிம்பாவே நாட்டில் ஒவ்வொரு தடவையும புதிய புதிய மாற்றங்களைக் காணமுடிகிறது. இங்குள்ள மக்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள். கிரிக்கெட்டை அதிகம் நேசிப்பவர்கள். இயற்கை வளத்திற்கு இங்கு பஞ்சமே கிடையாது. இங்குள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். இம் முறையும் வாய்ப்பு கிடைத்தால் அங்கு ஒருமுறை சுற்றி வர ஆசை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெற்றில் புதிய விதிமுறைகள அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. முதல் முறையாக இந்த விதிமுறைகளுடன் நாங்கள் விளையாடப்போகிறோம்.

இப் புதிய விதிமுறைகளை சிறந்த முறையில் எப்படி பயன்படுத்திக்கொள்வது என்று ஆலோசனை செய்துள்ளோம். ஆனால நியூசிலாந்து அணி மிகச் சிறந்த அணி. அவர்களைச் சமாளிக்கவும் சில உத்திகளை வகுத்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். (து-19)

# பாரஸ்ட் கில்ஸ் கிளாசிக் டெனிஸ் தொடரில் இந்திய வீராங்கனைகள் சாதனை



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் பாரஸ்ட் கில்ஸ் கிளாசிக் ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் பெண்களுக்கான முதற்சுற்றில் தரவரிசையில் 50 ஆவது இடத்தில் உள்ள இந்திய வீராங்கனை சானியா மிர்சா 59 ஆவது இடத்தில் உள்ள இஸ்ரேல் வீராங்கனை சகார் பிரையுடன் மோதினார்.

பரபரபபான இந்த ஆட்டத்தில் சானியா 7-6,6-1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, மற்றொரு இந்திய வீராங்கனை சிகா ஓபராய் 0-6, 7-5, 6-3 என்ற செற கணக்கில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த யுலியா பெகல் ஜிமரை வீழ்த்தினார். (து-19)

# கரித்தாஸ் - கியூடெக்கின் மனித உரிமைகள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசத்தின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான வலையமைப்பை ஸ்தாபிக்கும் திட்டத்தின் கீழ் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் மனித உரிமைகள் பிரிவினர் நடாத்தும் இடம் பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தமர்வும், நடமாடும் சேவையும் இன்று காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெறும்.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணிப்பாளா வணபிதா.கி.ஜோ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சட்டத்தரணி நிரஞ்சன் பிரதான சொற்பொழிவாற்றுவார்.

மனித உரிமைகள் தொடர்பிலான பிரச்சினைகளிற்கு நிவாரணம் வழங்கும் நடமாடும் சேவையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நோர்வே அகதிகள் பேரவை, மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவு, அகவொளி குடும்ப வளத்துணை நிலையம், மனித உரிமைகள் இல்லம், மனித உரிமைகள் நிலையம் ஆகிய அமைப்புகள் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றவுள்ளன.

மேலும் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள கோணற்புலம் முகாம், கிட்டு முகாம், தும்புத் தொழிற்சாலை முகாம், ஊரணி முகாம், குருவளை முகாம் மற்றும தெல்லிப்பளை துர்க்கா நலன்புரி நிலையம் ஆகிய இடம் பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (து)

## மகோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் செருக்கல் பதி, சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம, எதிர்வரும் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

15ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 16ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் பூரணையன்று, தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (அ-21)

# மோ. சைக்கிள், சைக்கிள்கள் களவு

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தில் தடைமுகாம்களுக்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள்கள் இரண்டும் களவாடப்பட்டுள்ளன.

நல்லூர் அரசடி சந்தியில் தடைமுகாமுக்கு வெளியெ நேற்று முன்தினம் இரவு பக்தா ஒருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவைத்துவிட்டு ஆலயத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிய வேளையில், அம் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது,

மற்றும் நேற்று நண்பகல் அளவில் செட்டித்தெரு மற்றும் நல்லூர் குறஸ்றோட் ஆகிய இடங்களிலுள்ள தடைமுகாம்களுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த இரு சைக்கிள்களும் களவாடப்பட்டுள்ளதாக நல்லூர் உற்சவகால சிறப்புச் செயலணியினர் தெரிவித்தனர். (ற)

# றுகுணு பல்கலையில் தாக்குதல் 40 மாணவர்கள் காயம்

(கொழும்பு)

றுகுணு பல்கலைக்கழ மாணவர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு இனம் தெரியாத குழுவினர்கள் நடத்திய தாக்குதலில 40 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்களில் 33 பேர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த இனம் தெரியாத குழுவினர் மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அவ்வேளையில், துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டதாக மாணவர்கள் தொிவித்துள்ளனர்.


எனினும், துப்பாக்கிச் சூட்டினால் எவரும் காயமடையவில்லை.

காயமடைந்த மாணவர்களில் பெரும்பாலானோர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-2)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் ③



அடுத்த கேள்வி-காட்டிலிருந்து அவ்வளவு தூரம் வெளியே போக வேண்டுமானால், எதை நம்பிச் செல்வது? யாரேனும் இடையில் புகுந்து, போலீஸிடம் காட்டிக் கொடுத்துவிட்டால் எப்படிச் சமாளிப்பது?

வீரப்பன் இந்தச் சந்தேகத்தைப் புரிந்துகொண்ட 'புதியவர்கள்' அவன் திருப்திப்படும்படி ஒரு பதிலை யோசித்தார்கள்.

தர்மபுரியில் தான் சிகிச்சை. அங்கிருந்து ஆம்புலன்ஸ் எடுத்தால் தானே அநாவசியமாக சந்தேகம் வரும்? 'காட்டுக்குள் ஆம்புலன்ஸை அனுப்பு' என்று கேட்டால், ஆஸ்பத்திரிக்காரர்களும், போலீஸ் அல்லது வனத்துறையினரும் உஷாராகி, 'யாருக்கு? எதற்கு?' என்றெல்லாம் கேள்வி கேட்பார்கள்.

அதற்குப் பதிலாக, சற்றுத் தொலைவிலிருக்கும் சேலத்திலிருந்து ஒரு தனியார் ஆம்புலன்ஸை அழைத்து வந்துவிட்டால் என்ன? யாருக்கும் எதுவும் தெரியாது, எந்தப் பிரச்சினையும் வராது. அந்த ஆம்புலன்ஸின் உச்சியில், ஒரு விளக்கைச் சுழல விட்டால் போதும். அவசர சிகிச்சைக்காக யாரோ செல்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு, யாரும் வழிமறிக்கமாட்டார்கள். நேராக தர்மபுரி சென்று, சிகிச்சை பெற்றுக்கொண்டு சீக்கிரத்தில் திரும்பிவிடலாம்.

வீரப்பனுக்கு இந்தத் திட்டம் பிடித்திருந்தது. ஆகவே, சேலத்திலிருந்து கொண்டுவரப்படும் ஆம்புலன்ஸில், தன்னுடைய கோஷ்டியினர் மற்றும் ஆயுதங்களுடன், சிகிச்சைக்காகத் தர்மபுரிக்கு வரச் சம்மதித்தான் அவன்.

இதைக் கேள்விப்பட்ட போது, அதிரடிப் படையினருக்கு உற்சாகத்தில் தலை, கால் புரியவில்லை. நெடுநாளாக எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தத் தருணம் வரப் போகிறது; வீரப்பனைப் பிடிக்கப் போகிறோம் என்று அவர்கள் குஷியானார்கள்.

விறுவிறுவென்று ஏற்பாடுகள் நடந்தன. அதிரடிப்படைக்குச் சொந்தமான டெம்போ வான் ஒன்று, சில பல மாற்றங்கள் செய்யப்பட்டு, அவசர ஆம்புலன்ஸாக உருமாற்றப்பட்டது. அந்த வண்டியின் உண்மையான பதிவு எண்ணை மறைத்து போலியான எண் எழுதப்பட்டது. வீரப்பனுக்கு எந்தச் சந்தேகமும் வந்துவிடக்கூடாது என்பதற்காக, அந்த வாகனத்தில் சேலத்தில் இருக்கும் 'SKS மருத்துவமனை'யின் பெயர் எழுதப்பட்டது. அந்த ஆம்புலன்ஸை வீரப்பன் இருப்பிடத்துக்கு சரவணன் என்ற அதிரடிப்படை வீரர் ஓட்டிச்சென்றார்.

இதில் வேடிக்கையான ஒரு விஷயம் என்னவென்றால், அவசரமாக எழுதியதாலோ என்னவோ, அந்த ஆம்புலன்ஸில், 'SALEM' என்பதற்குப் பதிலாக, 'SELAM' என்று எழுதியிருந்தார்கள். தெரியாமல் செய்தார்களோ அல்லது வேண்டுமென்றோ செய்தார்களோ. நல்ல வேளையாக, இந்தத் தவறை வீரப்பன் கவனிக்கவில்லை. சந்தேகப்படவும் இல்லை.

ஆனால், அந்த வண்டியில் ஏறுவதற்கு முன்னால், வீரப்பன் பலவிதமான எச்சரிக்கைக் கேள்விகளை எழுப்பியதாகத் தெரிகிறது. பொதுவாக அந்தக் காட்டுக்குள் எங்கிருந்து எங்கே செல்வதென்றாலும், கால்நடையாகச் சென்றுதான் வீரப்பனுக்குப் பழக்கம். இப்போது, முதன் முறையாக, அதுவும் முன்பின் தெரியாதவர்களின் வாகனத்தில் போவது என்றால், அவனுக்கு நிறையத் தயக்கமாக இருந்திருக்க வேண்டும்.

சிறிது நேர விசாரணைகள், எச்சரிக்கைகள், திட்டமிடல்களுக்குப் பின், ஒருவழியாக, வீரப்பன் திருப்தியடைந்து, அந்த வண்டியில் ஏறிக்கொள்ளச் சம்மதித்தான்.

ஆனால், ஒரு பெரிய கேள்வி மிச்சமிருந்தது. ஒருவேளை யாராவது ஆம்புலன்ஸை நிறுத்தி, விசாரித்தால், வீரப்பனை அடையாளம் கண்டுகொண்டால் என்ன செய்வது?

இதற்கும் 'புதியவர்'களிடம் ஒரு திட்டம் இருந்தது. வண்டிக்குள் வீரப்பன் இருக்கிறான் எனபதை யாரேனும் தெரிந்துகொண்டால் தானே பிரச்சினை? அது தெரியாதபடி, வீரப்பனின் அடையாளங்களை மாற்றிவிட்டால், யாருக்கும் எந்தச் சந்தேகமும் வராது!

வீரப்பனின் முக்கியமான அடையாளங்கள் என்று பார்த்தால், அந்த முரட்டு மீசையும், கம்பீரமான பச்சைச் சீருடையும் தான். இவை இரண்டையும் மாற்றியாக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், தன்னுடைய 'செல்ல' மீசையைத் துறப்பதற்கு வீரப்பன் தயாராக இல்லை என்றுதான் சொல்லப்படுகிறது. என்றாலும், பிரச்சினையின் தீவிரத்தை விளக்கிச் சொன்னபின், அரைமனதாக அவன் தனது மீசையைக் குறைத்து, சாதாரண அளவில் மாற்றிக்கொண்டான்.

அடுத்தபடியாக, பச்சைச் சீருடையை மாற்றி, சாதாரண வெள்ளை ஆடை ஒன்றை அணிந்து கொண்டான் வீரப்பன். அதன்பின், அவனைப் பார்க்கும்போது, வீரப்பனைப் போலவே தெரியவில்லை. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் தான் தெரியும்.

இப்போது, வீரப்பனும் மற்றவர்களும் வண்டியில் ஏறிக்கொள்ள, உள்ளே இருப்பவர்கள் யார் என்று தெரியாதபடி ஜன்னல் திரைகள் எல்லாம் இழுத்து மூடப்பட்டன. வண்டி புறப்பட்டது.

அந்த ஆம்புலன்ஸில், வீரப்பனுடன் அவனுடைய கூட்டாளிகள் சேத்துக்குளி கோவிந்தன், சந்திரகவுடா, சேதுமணி (கோவிந்தன்) ஆகிய மூவரும் இருந்தார்கள். தங்களுடைய பாதுகாப்புக்காக, எந்திரத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் மற்றும் வேறு சில ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டான் வீரப்பன். கூடவே, ரூபாய் மூன்றரை லட்சம் பணமும்.

அவர்கள் எந்தப் பாதையில் சொல்கிறார்கள் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த அதிரடிப் படையினர், அந்தச் சாலையின் குறுக்கே, பொறி (கள்) அமைத்துக் காத்திருந்தார்கள்.

ஆனால், எந்த இடத்திலும் போலீஸ் நடமாட்டம் வெளிப்படையாகத் தெரிந்துவிடாதபடி கவனமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், எந்த நேரத்திலும் வீரப்பன் தனது திட்டத்தை மாற்றி விடலாம். சுதாரித்துக் கொண்டு காட்டுக்குள் திரும்பிச் சென்றுவிடலாம் அல்லது தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, வண்டியை ஓட்டும் சரவணனையும், அந்த ஆம்புலன்ஸை அழைத்து வந்த மற்றவர்களையும் கொன்றுவிடலாம்.

இப்படி ஏகப்பட்ட சாத்தியங்கள். இவற்றில் எது நடக்கப் போகிறது என்று நிச்சயமாகத் தெரியாத பதற்றத்துடன், நான்கு அதிரடிப்படைக் குழுக்கள் அந்தச் சாலையின் வெவ்வேறு பகுதிகளில் காத்திருந்தார்கள். இந்தமுறை கண்டிப்பாக வீரப்பனைப் பிடித்துவிட வேண்டும் என்று உறுதி அவர்களுக்குள் நிறைந்திருந்தது.

அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அந்தத் தருணம், இரவு சுமார் பத்தே கால் மணி அளவில சாத்தியமானது. தர்மபுரியில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில், பாப்பாரப்பட்டி கிராமத்திலிருந்த ஒரு பள்ளியின் அருகே, வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் வந்த வாகனம் மடக்கப்பட்டது. ஏற்கனவே திட்டமிட்டபடி, வண்டியிலிருந்த அதிரடிப் படையினர் இருவரும (அதில் ஒருவர் வாகன ஓட்டுநர்) சட்டென்று இறங்கித் தப்பிவிட, வீரப்பனின் கோஷ்டி வசமாக மாட்டிக்கொண்டது.


உடனடியாக, அந்த இடத்தைச் சுற்றிலும் மறைந்திருந்த அதிரடிப் படையினர் தங்கள் ஆயுதங்களுடன் தயார் நிலைக்கு வந்தார்கள். முக்கியமாக, அந்த இராத்திரி வேளை இருட்டைப் பயன்படுத்திக் கொண்டு, வீரப்பனோ, அவனுடைய கூட்டாளிகளோ வண்டியிலிருந்து இறங்கி ஓடித் தப்பி விடாதபடி கவனமாகச் சுற்றி வளைத்தார்கள்.

அடுத்து, ஒலிபெருக்கி மூலம் வீரப்பனோடு பேசியது அதிரடிப் படை. அவர்களின் வாகனம் முற்றிலுமாகச் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டது. இனி அவர்கள் தப்பிக்க வழியே இல்லை. ஆகவே, உடனடியாக சரணடைந்து விடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

(தொடரும்)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பதினெட்டாம் திருவிழா



## அருள்புரிய வா முருகா

ஆலய மணியின் ஓசையிலே
அன்று நிம்மதி யாய்வாழ்ந்தோம்
தேடி நினது பதம் பணிந்து
தீரா நோய்கள் பிணி அற்றோம்
ஆடிக் காற்றுத் துரும்பு போல்
அலைந்து அலைந்து துயர் உற்றோம்
தாளைப் பிடிக்க முருகா உன்
சந்நதி தேடி வந்துள்ளோம்
அமைதிக் காற்று வீசுதற்கு
அரங்கன் மருகா அருள்புரிவாய்!

*ரகு*

## தீயவரையும் தூயவராக்கும் செவ்வேள்

பொல்லாத குணம் கொண்ட அசுரரையும்
நல்வரந் தந்து ஆட்கொண்ட வேலா எம்
அல்லல் அகற்றிடுவாய் ஆறுமுக வேலவனே
நல்லருள் தந்து காத்திடுவாய் வடிவேலவனே

நல்லை நகர் வாழுகின்ற ஆறுமுகா உன் அழகை
நாளுமே காண உனைத் தேடி வருகின்றார்
வந்து நிதம் தொழுது வரம் கேட்டிடுவார்க்கு
வருமிடர்கள் தீர்த்திடுவாய் மால் மருகா முருகா

*தி.மயூரகிரி சர்மா, நீர்வை*

## போரினைப் போக்கிடுவாய்

காவடி கரகமென்று காட்சிகள் பல தருவோம்
காலடி தெரியாமலே மலர்களைத் தூவிடுவோம்
பாலொடு பழமும் தந்துன்னாசை தீர்த்திடுவோம்
வேலொடு வருபவனே எம்நாட்டுப் போரினைப் போக்கிடுநீ

நண்ணினார்க்கு நலம் பல தரும் நல்லூரனே
வண்ணமயில் மீதேறி வீதி வலம் வரும் வேளை
கண்விழித்துப் பாரையா கருணையுடன் எம்மை
பண்ணிசைத்துப் பாடுகிறோம் போரினைப் போக்கிடுநீ

*எஸ்.எஸ்.காசிப்பிள்ளை*

## எத்தனை அலங்காரம்!

எத்தனை அலங்காரம் முத்தமிழ் முருகனுக்கு
சக்தியின் பிள்ளை சரவண முத்துவுக்கு
எத்தனை அலங்காரம்
குழந்தை அலங்காரம் கோடிப் புன்னகை
கூடும் அலங்காரம்
மழலை அலங்காரம் மங்கையர் தாலாட்டி
மகிழும் அலங்காரம்
சிறுவன் அலங்காரம் சிவனுக்கு மந்திரம்
செப்பும் அலங்காரம்
குமரன் அலங்காரம் கோதையர் இருவர்
கொஞ்சும் அலங்காரம்
வேடன் அலங்காரம் வேல் விழிவள்ளியை
விரும்பும் அலங்காரம்
விருத்தன் அலங்காரம் விநாயகர் துணையில்
வெற்றி அலங்காரம்
அரசன் அலங்காரம் அனைத்து செல்வமும்
அளிக்கும் அலங்காரம்
திருமண அலங்காரம் தேவியர் இருவர்
திருப்பூட்டும் அலங்காரம்

*சின் கந்தையா, பொன்னாவளை*

## கனாக் கண்டேன்

காவடிகள் தோளினிலே திருநடனம் ஆட
பாவடிகள் இசைத்தமிழால் இன்னிசை ஒலிக்க
தாவடிகள் தேரடியில் தங்கி இளைப்பாற
மாவடியில் மால்மருகன் வரக் கனாக் கண்டேன் தோழி

அட்ட திக்கிருந்தும் அடியார் கூட்டம் வந்து
பட்ட துயர் போக்கிடவே நேர்த்தி செய்ய
வாட்டமின்றி வானவர்கள் வந்து வாழ்த்திசைக்க
ஆட்டமுடன் அன்பழகன் வரக் கனாக் கண்டேன் தோழி

*மு.விக்னேஸ்வரன்*

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை - குறள்

வலம்புரி

## சந்தர்ப்பத்தை தவற விட்ட ஜனாதிபதி சந்திரிகா

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்படவேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2006ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமென தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிவந்தார்.

2005ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நடத்தப்படவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை 2006ஆம் ஆண்டிற்கு பிற்போடுவதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை என்பதை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினால் 2005ஆம் ஆண்டிலா அல்லது 2006ஆம் ஆண்டிலா ஜனாதிபதித்தேர்தல் என்ற குழப்பத்திற்கு முடிபு காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நவம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்கவேண்டிய தேவை உருவாகிவிட்டது.

இதன் காரணமாக இன்னும் 3மாதங்கள் மட்டுமே சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதிப் பதவியில் இருக்கமுடியும்.

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் ஒருவர் இரண்டு தடைவைகள் மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்கமுடியும். அந்த இரண்டு தடைவைகளையும் சந்திரிகா குமாரதுங்க அனுபவித்துவிட்டார்.

எனினும் அவரால் இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட்டதா என்பதை மீட்டுப்பார்த்தால் வேதனை மட்டுமே மிஞ்சுவதாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்த சந்திரிகா குமாரதுங்க, இந்த யுத்தத்தை நிறுத்தி நிரந்த சமாதானத்தை எட்டுவேன் என உறுதி கூறியிருந்தார்.

அந்த உறுதி மொழியை நம்பி இரண்டு தடைவைகள் மக்கள் சந்தர்ப்பம் கொடுத்தனர். எனினும் அந்த சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்த தவறிவிட்டார்.

வெறும் பதவி ஆசைகளுக்காக மட்டுமே அவரின் உறுதி மொழிகள் இருந்தன என்பதை இப்போது மக்கள் உணர்ந்திருப்பர்.

இரண்டு தடைவைகள் ஜனாதிபதிப் பதவியை வகித்த போதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத அவர், மூன்று மாதங்களுக்குள் தீர்வு காணவா போகின்றார் என்பது பொதுவான கேள்வி.

ஆயினும் விழுந்தும் மண் முட்டவில்லை என்பதற்காக நோர்வேயை அவசர அவசரமாக அழைத்து விடுதலைப்புலிகளுடன் பேச்சை நடத்த அவர் திட்டம் தீட்டியுள்ளார்.

தனக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை எல்லாம் தவற விட்டு இப்போது அவசரப்படுவதற்கும் காரணம் இருக்கின்றது.

அதாவது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பேன் என நாட்டு மக்களுக்கு உறுதியளித்த அவர், அதனை சாதிக்கத்தவறியதால் மக்களின் வெறுப்பை சம்பாதித்துள்ளார்.

இதனால் பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டு, பதவி விலகுவதன் மூலம் எதிர்காலத்தில் அதனைத்தனக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதே ஜனாதிபதியின் நோக்கம்.

எதுவாயினும் அவரின் நோக்கம் அவ்வளவு சுலபமாக நிறைவேறப்போவதில்லை என்பது தெளிவு.

அதேவேளை தூயமனதோடு இனப்பிரச்சினையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுகியிருப்பாராயின் நிச்சயம் நிரந்தர சமாதானத்தை அடைந்திருக்க முடியும்.

சொல்லொன்றும், செயல் ஒன்றுமாக இருந்தமையாலேயே அவரால் சமாதான விடயத்தில் எதனையும் சாதிக்க முடியவில்லை.

### யாழில் பேச்சுக்கள் நடைபெறலாம்

# பேச்சுக்களில் இராணுவத்தின் மூத்த தளபதிகளும் பங்கேற்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுக்களில் இராணுவத்தின் மூத்த தளபதிகளும் கலந்து கொள்வார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுகுறித்து தகவல் வெளியிட்டிருக்கும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால,

போர் நிறுத்த உடன்படிக்கையை படைத்துறை விடயங்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருப்பதால் பேச்சுக்களில் உயர் மட்டத் தளபதிகள் கலந்து கொள்வது இன்றியமையாதது.

ஸ்ரீலங்காவின் தேசியபாதுகாப்புக்கு தற்போது பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இக்கட்டான இன்றைய சூழ்நிலையில் படைத்தரப்பினர் வெளிநாடுகளில் சென்று பேச்சுக்களில் ஈடுபட முடியாது எனவும் இதன் காரணமாக பேச்சுக்கள் இலங்கையில் நடைபெறுவதையே அரசு விரும்புகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகளுடனான நேரடிப் பேச்சுக்களை யாழ்.குடாநாட்டில் நடத்துவதற்கு அரசு ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஆராயும் பொருட்டு சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால கடந்த புதன்கிழமை யாழ்.குடாநாட்டிற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மஹிந்த முன்வைக்கும் யோசனை என்ன?

### வெளிப்படுத்துமாறு கோருகிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷ நாட்டின் பிரச்சினைகள் தொடர்பான நிலைப்பாட்டை வெளியிடவேண்டுமென ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன? அவ்வாறு இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இருப்பதை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்வாராகவிருந்தால் அதற்காக முன்வைக்கும் தீர்வுதான் என்ன என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அதேவேளை, ரணில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை மஹிந்த ராஸபக்ஷ ஏற்றுக்கொள்கின்றாரா அவ்வாறு அந்த உடனபாட்டை நடைமுறைப்படுத்தும்வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த இணங்குகின்றாரா? அவ்வாறு இல்லாவிடின் போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதை விரும்புகின்றாரா? என்பதை கூறவேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் மாத்திரம் விடுதலைப் புலிகளுடன் பேசிவிட்டு இனப்பிரச்சினை மற்றும் சமாதானம் தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்தப்போகின்றாரா இல்லையா? இதற்கு எல்லாம் தெளிவான பதிலை நாமும் நாட்டு மக்களும் எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ, இனப்பிரச்சினை தொடர்பில் ரணில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகனுடன் 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இணங்கி கொண்ட தற்கமைய சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்கின்றாரா அல்லது இதற்கு மாற்றுயோசனைகளை கொண்டுள்ளாரா.

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் படுகொலை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷ என்ன நடவடிக்கையை எடுத்துள்ளார்?என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றார் என்பதும் தெளிவுபடுத்தப்படவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தனிப்பிரதிநிதித்துவத்தை ஐக்கியதேசியக்கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதாக கூறிய பீரிஸ் அது தொடர்பில் மஹந்தவின் நிலைப்பாடு என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-8)

### நயினை-நல்லூர்

# திருத்தலப் பஜனை யாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் இரதோற்சவத்தையொட்டி ஆண்டு தோறும நடைபெறும் நயினை-நல்லூர் திருத் தலப் பஜனைப பாதயாத திரை வழமை போல இம்முறையும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து திருமுறைப் பஜனை நடைபெறும். இரவு 7.00மணியில் இருந்து 8.00மணிவரை நயினை வட மேற்கு படகுத்துறை அருள் ஞானவைரவர் ஆலயத்தில் பஜனை நடைபெறும்.


மறுநாள் புதன்கிழமை காலை நயினை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் அபிஷேக,பூசை வழிபாட்டின் போது வேல் பூசையுடன் வேல் எடுத்துக் கொண்டு திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை ஆரம்பமாகிக் குறிகட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலய பூசை வழிபாட்டைத் தொடர்ந்து புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி ஆலயம், கிராஞ்சி முருகன் ஆலயம், நண்பகல் புங்குடுதீவு மத்தி பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வழிபாட்டைத் தொடர்ந்து மாலை சர்வோதயத்தில் பிரார்த்தனையைத் தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்,தென் பெருந்துறை சிவன் ஆலயத்திலும் ஆதிவைரவர் ஆலயத்திலும் நடைபெறும் பூசை வழிபாடு பஜனையைத் தொடர்ந்து அன்றிரவு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய்த்தில் தங்கி பஜனை நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை புறப்பட்டு விநாயகர் ஆலயங்கள், மடத்துவெளி முருகன்,விநாயகர் ஆலயம், வேலணைத்துறை முருகன், ஐயனார் ஆலய வழிபாட்டின் பின் நண்பகல் வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடு,கந்தர் அனுபூதி முற்றோதல் மகேஸ்வர பூசை நடைபெறும். தொடர்ந்து அதிசய வைரவர் ஆலயம்,மண்கும்பான் விநாயகர் ஆலயம், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை வழியாகக் கோட்டை முனீஸ்வரன் ஆலயம், யாழ்.பஸ்நிலய வைரவர் ஆலயம், சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தில் மாலை நடைபெறும் பூசை வழிபாட்டைத் தொடர்நது கொட்டடி, கூழாவடி வைரவர், நாவாந்துறை ஞானவைரவர் ஆலயம், நாகபூஷணி அம்பாள் ஆலயம் சென்று அன்றிரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தங்கிப் பஜனைகளும் நடைபெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை புறப்பட்டுச் சீனிவாசகம் வீதி வழியாகச் சிவன், காளியம்பாள், பெருமாள் கோவில் வழியாகக் கந்தர்மடம் சிவ உதயநாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து அரசடி வீதி வழியாக நலலை ஆதீனம் சென்று நல்லைக்கந்தன் திருத்தேரின்பின் திருவீதி பஜனை நடைபெறும்.

வவுனியா வேப்பங்குளம் சைவச்சிறார் இல்ல நிர்வாகஸ்தரும் மற்றும் சிறார்களும் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரையில் கலந்துகொள்கின்றனர். திருத்தலப் பஜனைப் பாதயாத்திரையில் கலந்துகொள்ளும் அடியவர்கள் ஆண் பெண் இருசாராரும் சைவப் பண்பாடு, கலாசாரத்திற்கமைய உடையணிந்து வரவேண்டும் எனவும் இத்திருத்தலப் பஜனை பாதயாத்திரையில் அனைத்து அடியவர்களும் கலந்துகொண்டு நாட்டில் அன்பும், அருளும், சாந்தியும், சமாதானமும் நிலவப் பிரார்த்திக்குமாறும் சப்ததிவக திவ்ய ஜீவனசங்க சமாசம கேட்டுள்ளது. திருத்தலப் பஜனை பாதயாத்திரை செல்லும் வீதியில் வசிப்பவர்கள் சைவக்கலாசாரத்திற்கமைய கும்பம் வைத்துப்பக்தி சிரத்தையுடன் அடியவர்களை வழியனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து பாதயாத்திரையில் கலந்து கொள்ளும் அடியவர்கள் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11.00மணிக்கு கந்தர்மடம் சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் ஒன்றுகூடி அங்கு வழமைபோய் வேல் சாமியார் நினைவாக நடைபெறும் குருபூசை நிகழ்வில் கலந்துகொண்டபின நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் செல்லவுள்ளனர். (ற)

### திணசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

**தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் பரிச வேதியைப் போன்றவர் இறைவன். தொட்டால் அந்த பொருளின் வடிவம் மாறாது ஆனால் அதன் இயல்பு மாறும். நமது மனித வடிவம் அப்படியே இருக்கும். ஆனால் பிறருக்கு தீங்கோ பாவமோ செய்யும் எண்ணம் நமக்கு இருக்காது என்று என் குருதேவர் கூறுவது உண்டு.**

சுவாமி விவேகானந்தர்

# ‘பாலியல்’ குற்றச்சாட்டில் விரிவுரையாளர் கைது

வீட்டுப் பணிப்பெண்ணான சிறுமி மீது (வய து16) பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றசாட்டின் பேரில் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் நேற்று பொலிசாரினால் கைது செய் யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளரினால் யாழ்.நீதிவான் நீதிமன்றத்திற்கு முறையிடப்பட்டதையடுத்து யாழ் மாவட்ட பதில் நீதிவான் ஸ்ரீநிதிநந்தசேகரனின் உத்தரவின் பேரில் அவர்கைது செய்யப்பட்டுள்ளார்.


வீட்டுப் பணிப் பெண்ணாகக் கடமையாற்றிய சிறுமி, குறிப்பிட்ட விரிவுரையாளரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுவந்துள்ளார். இதனையடுத்து சிறுமி தற்கொலைமுயற்சியில் ஈடுபட்டபோது யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் வைத்தியசாலை நிர்வாகத்தினால் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு முறையிடப்பட்டு அவர்களினால் சிறுமி விசாரிக்கப்பட்டார்.

அதன்போது சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோகம் அம்பலத்திற்கு வந்தது. சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினால் யாழ்.நீதிமன்றத்தில் முறையிடப்பட்டதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-58,8)

# தமிழறிஞர் சிவராமலிங்கம்பிள்ளையின் உடல் நேற்று தீயுடன் சங்கமமானது



தமிழறிஞர் சிவராமலிங்கம் பிள்ளையின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்ப ட்டது.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமான தமிழறிஞரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிக்கிரியை நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் சிவலிங்கராசா பேராசிரியர் சண்முகதாஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் சிறீகுமரன், கம்பன் கழகம் சார்பாக சிறிசங்கர், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் இரா. செல்வவடிவேல், ஆறுதிருமுருகன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் இரங்கல் உரையாற்றினார்கள். இறுதிக்கிரியைகள், இரங்கல் உரை நிறைவின் பிற்பாடு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத் துச் செல்லப்பட்டு பூதவுடல் தகனம்செய்யப்பட்டது. (ச-19)

# அவசர காலச்சட்டம் அமுலில்...

கதிர்காமர் கொல்லப்பட்டது கொழும்பு மாநகரில் அதுவும் அங்குள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள். கொலையாளிகளைப் பிடிப்பதே நோக்கமென்றால் நகரின் போக்குவரத்தை நிறுத்தி அங்கே ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து தேடுதல்களை நடாத்தி அதைச்செய்ய முயன்றிருக்கலாம்.

அவசரகாலச் சட்டம் என்ற அம்பின் மூலம் போர்நிறுத்த உடன்பாட்டை அடித்து வீழ்த்தவே சிங்கள அரசு முயல்கின்றது. சிங்கள நீதிமன்றின் தீர்ப்பு பொதுக்கட்டமைப்பை முடக்கியது போல சிங்கள அரசின் அவசரகாலச்சட்டம் கண்காணிப்புக் குழுவின் சேவையை -போர்நிறுத்த உடன்பாட்டின் இருப்பை பெரும் ஆபத்திற்குள்ளாக்கியுள்ளது என்றே கூறலாம்.

அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடனேயே யாழ்ப்பாணத்தில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த அவசரகாலச்சட்டம் காரணமாக இந்தக் கைது பற்றி சிங்களப் படைகளிடம் புலிகள் இயக்கமும் பேசமுடியாது, கண்காணிப்புக்குழுவும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது.

படையினர் தாம் விரும்பியவாறு, கைது செய்யவும், கொல்லவும் , சித்திரவதை செய்யவும் இந்தச்சட்டம் அவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இப்போதே நாடு முழுவதும் தமிழர்கள் அவசரகாலச்சட்டத்தின் கீழ்கைது செய்யப்படுகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்தி நடைமுறைப்படுத்தும் நோக்குடன் புலிகளுக்கும் அரசிற்குமிடையில் நேரடிப்பேச்சுக் நடக்கவிருக்கின்றன. ஆனால் அவசரகாலச்சட்டம் அகற்றப்படாது நீண்ட நாட்களுக்கு இருக்குமேயானால் நேரடிப்பேச்சிலும் எதையும் சாதிக்க முடியாத அவல நிலை ஏற்படவும் இடமுண்டு.

ஆகவே அவசரகாலச்சட்டம் உடனடியாக அகற்றப்படவேண்டுமென்பதே சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகுமென அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## இவ்வருடமே...

மன்றம் நேற்று வழங்க விருந்த வேளை காலை முதல் தீர்ப்பு வழங்கும் வரை உயர்நீதிமன் றத்திற்கு முன்னால் அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள் மற் றும் பலரும் பெருமளவில் கூடிநின்றனர். (ச-8,2)

## மாதாந்தக் கூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு சுண்டுக்குளி சோமசுந்தரம் அவனியில் உள்ள சங்கஅலுவலகத்தில் சங்கத்தலைவர் வே.தவச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட வுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது (து-43)


CARITAS-HUDEC JAFFNA

VACANCY

1.Children Program Assistant

To work in full partnership with the Caritas Internationals (CI) Project Advisor Children Programme in designing, managing, monitoring and evaluating projects.

*Base Station*: Jaffna

Main Duties:

- Assist the Program Manager in conducting coordination meetings and workshops with caregivers.
- Conducting workshops with children.
- Preparing reports of workshops and meetings with caregivers and children.
- Conduct regular visits in Children's Home to monitor the implementation of activities.
- Updating regularly the data records about the children living in the Children's Homes involved in the Program.
- Monitoring and Supervise Resource Personnel employed for specific activities within the frame of the Program.
- Conducting participatory needs assessment in the Children's Homes involved in the Program.

*Requirements:*

- Background on child care
- Experience in conducting workshop
- Knowledge in community based approach
- Good team player
- Computer literacy
- Fluency in English, spoken and written
- Willingness to travel to Kilinochchi and Mullaitivu

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address latest by 1 September 2005

*Father Jeyakumar* Or e-mail:hudec @ sltnet.lk

*Caritas-Hudec Jaffna*

*14 Mathew's Road, Deogu Street,*

*Jaffna*

PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS

(9761)



பதவி வெற்றிடம்

➡ கணனிப் பக்க அமைப்பாளர்கள்

(பயிலுநர் -இருபாலாரும் - ஆண்கள் இரவுக்கடமை)

➡ அலுவலகச் செய்தியாளர்கள், கட்டுரையாளர்கள்

(பயிலுநர் -இருபாலாரும்)

➡ விற்பனை முகாமையாளர்

(ஆண்கள்)

கல்வித் தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி

➡ இயந்திர இயக்குநர்கள்

(ஆண்கள் - பயிலுநர் - இரவுக்கடமை)

குறிப்பு:

யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

சுய விபரங்கள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் நிர்வாக உத்தியோகத்தர் வலம்புரி, இல.3 இரண்டாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்



திருமணக்கார் [குளிரூட்டியது]

வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467

(c-9843)



மனோகரா யாழ்.

விக்ரம், சதா மற்றும் பலர் நடிப்பில்.

அந்நியன்

கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30

வெகுவிரைவில்:

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

தொட்டிஜெயா



நிறைஞ்சனாஸ்

சங்கானை

அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு

சேர்ந்து கலக்கும்

கா.நே

10.30,

02.30

06.30

09.30




இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

சத்யராஜ், நமீதா நடித்த

இங்கிலீஷ்காரன்

(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)

காலம்: 10.30, 2.30, 6.30, 9.30


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.